உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 9 | உருத்ரோத்காரிஹூ சித்திரைமீ 1923ஹூ எப்ரல்மீ | இதழ் 1 |
|---|---|---|


உள்ளுறை

பக்கம்.


| | |
|---|---|
| விநாயகர் வணக்கம் ... ... ... ... | 1 |
| ஸ்ரீ விநாயகக் கடவுளது பிரபாவம் ... ... ... | 2 |
| முருகக்கடவுளது சட்டி விரத வரலாறு ... ... | 4 |
| சிவஞானபோதம் ... ... ... ... | 5 |
| சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் .. ... ... | 7 |
| சபாக்கிரந்தம் .. ... ... ... | 9 |
| ஆன்மா ... ... ... | 29 |


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. கா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.

---


பத்திரிகாசிரியர் :

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, எழுகிணறு, சென்னை.


---


சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

**1923.**

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

சிவமயம்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் வெளியிட்டுள்ள நூல்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| "சைவம்" என்னும் மாதாந்தரப் பத்திரிகை (1915ஆம் முதல் 1919ஆம் வரையில் வெளிவந்தவை.) காலிகோ கட்டடம் செய்தது விலை | 6 | 0 | 0 |
| ஒவ்வொரு வருடப் பத்திரிகை | 1 | 8 | 0 |
| "சைவம்" நிகழும் வருடப் பத்திரிகை வருடச்சந்தா | 1 | 8 | 0 |
| ஞானப்பிரகாச சம்பாஷணை | 0 | 1 | 0 |
| ஞானானந்த சம்பாஷணை | 0 | 0 | 6 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0 | 0 | 6 |
| விவாகவிதியும் கலியுக தருமமும் | 0 | 0 | 6 |
| சைவ சமயிகளின் கடமை | 0 | 1 | 6 |
| கோபப் பிரசாத உரை | 0 | 1 | 6 |
| சிவலிங்மாலிய மான்மியம் | 0 | 0 | 6 |
| திருமுறைப் பெருமை | 0 | 4 | 0 |

---

# "சைவம்"

## சந்தா விவரம்

வருடம் ஒன்றுக்கு தபாற் கட்டணம் உட்பட

| | | | | |
|---|---|---|---|---|
| இந்தியாவும், சிலோனும் .... ... | ரூபா | 1 | 8 | 0 |
| வெளி தேசங்களுக்கு ... ... | ,, | 2 | 0 | 0 |
| தனிப்பத்திரிகை ... ... | ,, | 0 | 3 | 0 |
| மாதிரிப்பிரதி ... ... | ,, | 0 | 3 | 0 |

## விளம்பர விவரம்

| | | ஒரு மாதத்திற்கு | | | ஒரு வருடத்திற்கு | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ... | ரூபா | 5 | 0 | 0 | 35 | 0 | 0 |
| அரை பக்கத்திற்கு ... | ,, | 3 | 0 | 0 | 25 | 0 | 0 |
| கால் பக்கத்திற்கு ... | ,, | 2 | 0 | 0 | 15 | 0 | 0 |

பத்திரிகை வருடந்தோறும் சித்திரைமீ முதல் பங்குனி வரையில் ஒரு புத்தகமாகுமாறு பக்கங்களுக்கு இலக்கமிடப்படுவதனால், சந்தாதாரர்களுக்கு சித்திரை மாதப்பத்திரிகை முதலாகவே எல்லாப் பத்திரிகைகளும் தரப்படும்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்


| மலர் 9 | உருத்ரோத்காரி௵ சித்திரை௴<br>1923௵ ஏப்ரல்௴ | இதழ் 1 |
|---|---|---|


## விநாயகர் வணக்கம்

(கோயிற் புராணம்)

தன்னோங்கு மலரடியுந் தளிரோங்கு சாகைகளு
மின்னோங்கு முகக்கொம்பும் விரவியகண் மலர்களுமாய்
மன்னோங்க நடமாடு மன்றோங்கு மதிற்குடபாற்
பொன்னோங்கன் முன்னோங்கும் பொற்பமர்கற் பகம்போற்றி.

(இ - ள்) தன் ஓங்கு மலர் அடியும் = தம்முடைய மேலாகிய செந்தாமரை மலர்போலுந் திருவடிகளும்—தளிர் ஓங்கு சாகைகளும் = (செவ்வொளியினாலே) தளிரினுஞ் சிறந்த திருக்கரங்களும் — மின் ஓங்குமுகக் கொம்பும் = ஒளி சிறந்த முகத்திற் கொம்பும் — விரவிய கண் மலர்களுமாய் = பொருந்திய மூன்று திருக்கண் மலர்களுமாய்—மன் ஓங்க நடம் ஆடும் மன்று = பதியாகிய சிவம் (ஆன்மாக்கள் பாசத்தைக் கீழ்ப்படுத்தி) ஓங்கும் பொருட்டுத் திரு நிருத்தஞ் செய்தருளும் கனக சபையினுடைய - ஓங்குகுடபால் மதில் = உயர்ந்த மேலைத்திருமதிலிலே—பொன் ஓங்கல் முன் ஓங்கும் பொற்பு அமர் கற்பகம் போற்றி = பொன்மலை போலும் திருக்கோபுரத்தின் முன் எழுந்தருளியிருக்கும் அழகு பொருந்திய கற்பக விநாயகர் துதிக்கப்படுவர். (எ - று).

இதில் கற்பக விநாயகர் என்னும் பெயருக்கேற்ப — தன் ஓங்கு மலர் அடியும் = தன்னுடைய பெருத்த அகன்ற அடியும் — தளிர் ஓங்கு சாகைகளும் = தளிர் நிறைந்த பக்கக்கிளைகளும்—மின் ஓங்கும்

# முருகக் கடவுளது சட்டிவிரத வரலாறு

இது ஐப்பசிமாதம் சுக்கிலபக்ஷத்துப் பிரதமை முதல் சட்டிவரையிலுமுள்ள ஆறுநாளும் முருகக் கடவுளை முன்னிட்டு அநுட்டிக்கும் விரதமாம். இவ்விரதானுட்டான காலத்தில் ஆறுநாளும் உபவாசம் செய்தல் வேண்டும். அப்படிச்செய்ய இயலாதவர்கள் ஒவ்வொருபோது உணவுகொண்டு சட்டியில் உபவாசமிருத்தல் வேண்டும். எல்லா ஆலயங்களிலும் 6-ம் நாளாகிய சட்டியில் முருகக்கடவுளுக்குச் சூரசங்கார மகோற்சவம் நடத்தல்வேண்டும். இவ்விரதத்தை மெய்யன்புடன் ஆறுநாளும் அநுட்டித்துப் பூர்த்திசெய்து ஏழாம்நாள் அடியவர்களுக்கு மகேசுரபூஜை நடத்தல்வேண்டும். மாதந்தோறும் வரும் சுக்கில பக்ஷத்துச் சட்டி திதியில் முருகக்கடவுளை வழிபட்டுப் பழவர்க்கம், பானகம், மிளகு இவற்றில் இயன்றதொன்றை உட்கொள்ளல் உத்தமமாகும். இச்சட்டிவிரதத்தின் காரணம் முருகக்கடவுள் சூரபதுமனுடன் போர் செய்யத்தொடங்கி ஆறுநாள் போர் செய்து ஆறும்நாள் அவனை வெற்றி கொண்டார் ஆதலானும் அவ்வாறு நாட்களிலும் அச்சூரபதுமனால் துக்கமடைந்துள்ள தேவர்கள் முனிவர்கள் முதலியோர்கள் துயரங் கொண்டு வாடி முருகக்கடவுளைத் துதித்துக்கொண்டிருந்தார்கள். ஆதலானும் வைதிக முறைப்படி அவ்வாறு நாளும் உபவாசமாகவிருந்து அவரது திருப்புராணம் படித்துக்கேட்டு அவரைத் தோத்திரஞ் செய்துகொண்டிருப்பது வழக்கம். ஐப்பசி மாத சட்டித் திதியில் சூரபதுமனை இரு கூறுகப் பிளந்து வலப்புறமாகிய மயிலை வாகனமாக இவர்ந்து தேவர்கள் முனிவர்களுக்குக் காட்சி கொடுத்தார். ஆதலால் ஐப்பசி மாதச் சட்டியில் பிற்பொழுது மயில்வாகனத்தில் முருகக் கடவுளைத் தரிசனஞ் செய்தல் மேலாகிய சிவபுண்ணியமாகும். சூரபதுமன் முதலிய அவுணர்களை அடியோடு களைந்து தேவர்கள் முனிவர்களை அவனால் நியமித்த சிறையைத் திறந்துவிட்டு இந்திரனைப் பழையபடி சுவர்க்கத்தில் முடி சூட்டிக் குடியேற்றி வைத்த இப்பெருமானது விரதமாதலால் இவ்விரதத்தை மெய்யன்போடு அநுட்டிக்கின்றவர் சத்துரு சயம், இராச வசீகாம், நன்மக்கட்பேறு, மரண பயமின்மை முதலிய சுகங்களைப் பெற்றுப் பின் மறுமையின்பத்தையும் பெற்றுய்வார்கள். அரகர சிவசிவகுமாராயநம.

சண்முக தாசர்.

## பன்னிரண்டாம் சூத்திரம்—ஒழிபு அதிகாரணம்

(8-வது மலரின் 219-வது பக்கத் தொடர்ச்சி.)

### வெண்பா.

*வினையா லசத்து விளைதலான் ஞானம்*
*வினைதீரி னன்றி விளையா—வினைதீர*
*ஞானத்தை நாடித் தொழவே யதுநிகழு*
*மானத்தா லன்பிற் றொழு.*

(இ - ள்) *வினையால் அசத்து விளைதலான்* = பிராரத்தவினை வாசனையால் பிரபஞ்சத் தோற்றம் மேம்படலால்—*வினை தீரினன்றி ஞானம் விளையா* = பிராரத்தவினை வாசனை யொழிந்தாலன்றி (மெய்யுணர்வின் பயனாகிய) சிவத்தோற்றம் மேம்படுதல் உண்டாகாது—(ஆதலால்) *வினைதீர* = அப்பிராரத்தவினை பற்றறக் கழியும்பொருட்டு—*ஞானத்தை நாடித் தொழவே அது நிகழும்* = அம்மெய்யுணர்வுடையாரை நாடி வழிபடவே (அப்பிராரத்தவினை நீங்கி) மெய்யுணர்வு மேம்பட்டு நிகழும்—*ஆனத்தால்* = ஆனதனால்—*அன்பின் தொழு* = (அவரை) அன்பினால் வழிபடுவாயாக (எ - று.)

*தன்னை யறிவித்துத் தானாகச் செய்தானைப்*
*பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே*
*தானேதா னச்செய்துந் தைவமென்றுந் தைவமே*
*மானே தொழுகை வலி.*

(இ - ள்) *தன்னையறிவித்து* = (தன் உண்மை யறியமாட்டாது குருடாய்க்கிடந்த உயிர்க்குப் பலவழியாலும்) அதனை அறிவித்து—*தான்* = (மிகவும் எளிய) அவ்வுயிரை—*தான் ஆச் செய்தானை* = (மிகவும் அரிய பொருளாகிய) தானாகும் வண்ணம் செய்தளித்த குருமூர்த்தியின் பேருதவியை—*பின்னர் மறத்தல்* = அதன்பின் மறத்தல்—*பிழையலது* = (இதற்குமுன் அறியாமையால் மறந்த குற்றம்போல்) ஒழியக் கூடிய குற்றமன்று—(ஆதலாலும்)—*முன்னவன் தானே தானச் செய்தும்* = முதல்வன் அவ்வாறு உயிராகிய தன்னைப் பதியாகிய தானேயாகச் செய்தாலும்—*தைவம் என்றும் தைவமே* = (இதுகாறும் தனக்குச் சுதந்திரமின்றி முதல்வனது உபகாரத்தை அவாவி அடிமையாயிருந்த) உயிர் எக்காலத்தும் (அதாவது சீவத்தன்மை நீங்கிச் சிவத்தன்மை

யடைந்தவிடத்தும்) அவ்வாறு அடிமையேயாம் — (ஆதலாலும்) — மானே = (ஞானாசிரியனாகிய) அப்பெரியோனை—தொழுகை வலி = வழி படுதலே அவ்வுயிர்க்கு வலியாவது (எ - று.)

ஆன்மா முத்தியிலும் சிவத்தின் அடிமை யென்பதை "மீளா வடிமை யுமக்கே யாளாய்" என்னும் சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத் தாலும், "சங்கவெண் குழையோர் காதிற் கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே" என்னும் திருத்தாண்டகத்தாலும் அறிக.

முன்னவனே என்பதில் ஏகாரம் அசைநிலை. மற்ற ஏகாரங்கள் தேற்றம்.

தைவம் = தேவனதுடைமை.

மான் = மஹான் = பெரியோன்.

மானே தொழுகை = அப்பெரியோனை வழிபடுதலே.

தானாச் செய்தும் = தானாகச் செய்தாலும்.

வலிதருவதனை வலியென்றுபசரித்தார்.

இவ்வெண்பாவினால் சீவன் முத்தர்க்கும் சிவதேசிகன் வழிபாடு அவசியமென்பது உணர்த்தியவாறாம்.

சிவமென்னு மந்ததா சிந்தைநேர் நோக்கப்
பவமின்றாங் கண்வா சகத்திற்—சிவமுண்டா
மொன்று மிரண்டு மலத்தார்க்கிங் கொண்குருவா
லின்றிந்நூன் மும்மை மலர்க்கு.

(இ - ள்) சிவம் என்னும் அந்ததா = (சீவன் என்னும் தன்மையி னின்றும் நீங்கிச்) சிவம் என்று ஓதப்படும் வேதாந்தத் தெளிவாகிய சித் தாந்தத்தையுடைய மாணவகனே = ஒன்றும் இரண்டும் மலத்தார்க்கு = ஒன்றும் இரண்டும் ஆய மலங்களையுடையவர்க்கு (அதாவது ஆணவ மலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலருக்கும் ஆணவமும் கன்மமும் ஆகிய இருமலமுடைய பிரளயாகலருக்கும்) = சிந்தை நேர் நோக்க கண் வாசகத்தின் பவம் இன்று ஆம். சிவம் உண்டாம் = (முதல்வன்) முறையே அறிவின் கண் நின்று அருட்பார்வையில் நோக்குதலாலும், தேவகுரு வாய் முன் நின்று செய்யும் திருநோக்கம் (பரிசம்) வாக்கு எனப்படும் தீக்கையாலும் பிறவிக்கு ஏதுவாய பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் விளங்கும்—(ஆதலால்)—மும்மை மலர்க்கு இங்கு ஒண்குருவால் இன்று இந்நூல் = மும்மலமுடைய சகலர்க்கே உரித்து இவ்வுலகத்து அனுபவ முடைய தேசிகராற் போதிக்கப்படும் இச்சிவஞான போதநூல். (எ-று)

அந்தம் = வேதாந்தம். அந்ததரம் = சித்தாந்தம். சித்தாந்தத்தைப் பெற்ற பெரியோர் பெருமை கூறுவார் "சிவமென்னும் அந்ததர" என்றார். சிவம் என்னும் = சிவம் எனப்படும்.

சிந்தை = அறிவின்கண். நேர் நோக்குதலாவது முன்னிருந்த மருட் பார்வையைப் போக்கி அருட்பார்வையால் நோக்குதல். நோக்க = நோக்குதலால். இந்நூல் அனுபவமுடைய தேசிகனலன்றி விளங்காதென்பார் ஒண் குருவால் என்றார்.

இன்று இந்நூல் = "இக்காலத்து உரைக்கப்பட்ட நூல்" எனினும் அமையும்.

மும்மை = மூன்று. மும்மைமலத்தார் சகலர்.

---

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

இதின் 24-வது வருடாந்த மகாஜனக்கூட்டம் நிகழும் 1923ஆ மேமீ 13௳ மாலை 4-மணிக்கு இதின் சபா மண்டபத்தில் கூடிற்று. அப்போது ஸ்ரீமான்-சதுரை. இராஜாகண்ணு முதலியாரவர்கள் B. A. அக்கிராசனம் வகித்தார்கள். ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு ஆராதனையும் தமிழ்வேத பாராயணமும் செய்தபின் அச்சிட்டு முன்னமே சபையினர் யாவருக்கும் அனுப்பப்பட்டிருந்த 1922ஆ சபாக்கிரந்தம் வாசித்து அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் (Savite Elementary School) பாடசாலைப் பிள்ளைகளுக்குப் புத்தகப் பரிசளிக்கப்பட்டது. அதன் பின் கீழ்க் கண்டவர்கள் நிருவாக சபையினராக நியமிக்கப்பட்டார்கள்.

**சபைத்தலைவர்**

ஸ்ரீமான் சதுரை. இராஜாகண்ணு முதலியாரவர்கள் B.A.,
Retired Supt., Accountant General's office.

**உதவி சபைத்தலைவர்கள்**

" கா. ரா. நமசிவாய முதலியாரவர்கள்,
Lecturer in Tamil, Queen Mary's College.

" R. காசி விசுவநாத முதலியாரவர்கள்,
Hony., Magistrate & Merchant.

**காரியதரிசி**

" இ. ஆதிமூல முதலியாரவர்கள்,
Editor of the "Saivam" and Retired Accountant,
Military Accts., Dept.

### உதவி காரியதரிசி

ஸ்ரீமான் C. M. மீனாட்சிசுந்தர முதலியாரவர்கள், வர்த்தகர்.

### சைவபாடசாலை யதிபர்

" R. சண்முக முதலியாரவர்கள்,
Clerk, Messrs. Parry & Co., Ltd.,

### போக்கிஷதாரர்

" வா. தி. கோவிந்தராஜ முதலியாரவர்கள்,
Clerk, Legislative Council office.

### புத்தகசாலை யதிபர்

" N. அப்பாதுரை முதலியாரவர்கள், Clerk, Post Office.

### அத்தியட்சர்கள்

" திரு. சபாபதி முதலியாரவர்கள், Retired Sub-Engineer.

" சண்முகசுந்தர முதலியாரவர்கள்,
Preventive Officer, Sea Customs Office.

" T. முத்துசாமி முதலியாரவர்கள்,
Clerk, Port Trust Office.

" P. M. முருகேச முதலியாரவர்கள்,
Manager, Caxton Press.

" ரா. பி. துரைசாமி முதலியாரவர்கள், Govt. Pensioner.

" P. இராஜு முதலியாரவர்கள்
Clerk, General Post Office.

" இ. கண்ணப்ப முதலியாரவர்கள், Land-lord

### கணித பரிசோதகர்

" கூ. சிவ. வாசுதேவ முதலியாரவர்கள்,
Retired Accountant, M. & S. M. Ry.

ஸ்ரீமான் N. அப்பாதுரை முதலியாரவர்கள் "உண்மை, உறுதி, அஞ்சாமை" என்னும் விஷயமாய் உபந்நியாசம் செய்தார்கள்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

இஃது

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை

---

உருத்ரோத்காரி௵—1923-24

## ஒன்பதாவது மலர்

---


பத்திரிகாசிரியர்

இருக்கம் - ஆதிமூல முதலியார்

Retired Accountant, Military Accounts Department.

சைவ நிகேதனம்-43 பாளையப்பன் வீதி, சென்னைமாநகர்



சாரதா அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை

1924

விலை ரூபா 1-8-0

சிவமயம்

# அட்டவணை

---


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| அவனன்றி யோரணுவு மசையாது | 54 |
| அன்பு | 124 |
| ஆன்மா | 29 |
| இக்காலத்து ஆலயவழிபாடு | 70 |
| இக்காலத்து வாலிபர் நிலைமை | 169 |
| இராமரும் இராவணனும் | 42 |
| இருமணி | 114 |
| இருவினை யொப்பு | 141 |
| உருத்திராக்கப் பெருமை | 201 |
| கடவுள் உயிர்களுக்குக் காட்டிக் காண்பவர் | 120 |
| கடவுள் வேண்டுவார் வேண்டுவதே யீபவர் | 122 |
| கடவுளின் உருவம் | 100 |
| கிரியாமார்க்கம் | 117 |
| சகத்குரு விசாரம் | 203 |
| சமணர் கழுவேறியது | 57 |
| சன்மார்க்கம் | 73-93 |
| சிவஞானதீபம்-பதிபசு பாசவியல்—ஷை அபக்குவர்கதியியல் | 185, 236 |
| சிவஞானபோதம் | 5 |
| சிவலிங்கதத்துவார்த்தம் | 129 |
| சிவனுக்கிரங்காதார் சிவனுக்கிரங்குவரா ? | 225 |
| சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் | 7-9 |
| செவ்வந்திபுராணம்—தாயுமானசருக்கம் | 210 |
| தமிழ்ப்பாஷையிற் புதுநூல்கள் | 227 |
| திருச்சிற்றம்பலம் | 105 |
| திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் திருமாளிகை | 200 |
| தீபாவளி | 193 |
| நித்தியகருமம் | 165 |
| பூர்வஜன்ம ஞாபகம் | 197 |
| மஹாளயபக்ஷம் | 86 |
| மாயோற்பத்தி | 65 |
| முருகக்கடவுள் சட்டிவிரத வரலாறு | 4 |
| மூடபக்தி | 170 |
| மெய்ப்பொருணயனர் புராண ஆராய்ச்சி | 33 |
| மேடமுதலிய இராசிவிளக்கம் | 81 |
| விசுவாசம் | 177-206 |
| விநாயகர் வணக்கம் | 1 |
| விநாயகர் பிரபாவம் | 2 |
| வேதாங்கங்கள் | 160 |
| வேதாந்தம் | 110 |
| வேதாந்த சித்தாந்த சமரசம் | 153 |

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்


| மலர் 9 | உருத்ரோத்காரி௵ சித்திரைமீ<br>1923௵ ஏப்ரல்மீ | இதழ் 1 |
|---|---|---|


## விநாயகர் வணக்கம்

(கோயிற் புராணம்)

தன்னோங்கு மலரடியுந் தளிரோங்கு சாகைகளு
மின்னோங்கு முகக்கொம்பும் விரவியகண் மலர்களுமாய்
மன்னோங்க நடமாடு மன்றோங்கு மதிற்குடபாற்
பொன்னோங்கன் முன்னோங்கும் பொற்பமர்கற் பகம்போற்றி.

(இ - ள்) தன் ஓங்கு மலர் அடியும் = தம்முடைய மேலாகிய செந்தாமரை மலர்போலுந் திருவடிகளும்—தளிர் ஓங்கு சாகைகளும் = (செவ்வொளியினாலே) தளிரினுஞ் சிறந்த திருக்கரங்களும் — மின் ஓங்குமுகக் கொம்பும் = ஒளி சிறந்த முகத்திற் கொம்பும் — விரவிய கண் மலர்களுமாய் = பொருந்திய மூன்று திருக்கண் மலர்களுமாய்— மன் ஓங்க நடம் ஆடும் மன்று = பதியாகிய சிவம் (ஆன்மாக்கள் பாசத்தைக் கீழ்ப்படுத்தி) ஓங்கும் பொருட்டுத் திரு நிருத்தஞ் செய்தருளும் கனக சபையினுடைய - ஓங்துகுடபால் மதில் = உயர்ந்த மேலைத்திருமதிலே—பொன் ஓங்கல் முன் ஓங்தும் பொற்பு அமர் கற்பகம் போற்றி = பொன்மலை போலும் திருக்கோபுரத்தின் முன் எழுந்தருளியிருக்கும் அழகு பொருந்திய கற்பக விநாயகர் துதிக்கப்படுவர். (எ - று).

இதில் கற்பக விநாயகர் என்னும் பெயருக்கேற்ப — தன் ஓங்து மலர் அடியும் = தன்னுடைய பெருத்த அகன்ற அடியும் — தளிர் ஓங்கு சாகைகளும் = தளிர் நிறைந்த பக்கக்கிளைகளும்—மின் ஓங்கும்

முகக்கொம்பும் = ஒளி மிகுந்த அடிப்பணைகளும்—கள் விரவிய மலர்களுமாய் = தேன் பொருந்திய பூக்களுமாய் எனப் பொருள் விரித்து விநாயகப் பெருமான் திருவுருவம் கற்பகத்தருவோடு உவமிக்கப்பட்டிருத்தல் காண்க.

---

## ஸ்ரீ விநாயகக் கடவுளது பிரபாவம்

முன்னொரு காலத்திலே மாகதனென்னு முனிவனுக்கு விபுதை யென்னும் அசுர கன்னிகையின் வயிற்றிலே யானைமுகத்தோடு கயமுகாசுரன் என்னும் அசுரன் பிறந்து பெருந்தவம் புரிந்து சிவ வரப்பிரசாதத்தினால் தேவர் முதலினோராலும், மற்றும் ஆயுதங்களினாலு மிறவாதிருக்கத்தக்க பெருவலி பெற்றுத் தேவரும் யாவருந் தன்னேவல் கேட்க நீண்ட காலம் அரசாட்சி செய்வானாயினான்; இவ்வசுரன் புரிந்த பற்பல விடுக்கண்களினால் தேவர் முதலினோர் மிகுந்த துன்பமடைந்து கைலையங்கிரியை நண்ணி, சிவபெருமானது சந்நிதியிலே தங்கள் குறையை முறையிட்டபொழுது சிவபெருமான் தேவர்கட்கு நேர்ந்த துன்பங்களை நீக்கி, ரட்சித்தருளத் திருவுளங்கொண்டு பார்வதி சமேதராய் கைலையங்கிரிச் சாரலில் எழுந்தருளியிருந்தனர். அவ்விடத்து வனப்பு நிறைந்து விளங்கும் ஓர் மண்டபத்தின் கண் சித்திரமாயிருந்த சிவ சக்தி பிரணவங்கள் இரண்டுகளிற் றுருவாய் விளங்கி அதினின்றும் பிரணவ சொருபியாய் யானை முகத்துடன் விநாயகக் கடவுள் திருவவதாரமாகி, அங்குச பாசங்களென்னும் ஆயுதங்களையுடையராய்த் தமது கணங்களோடு சென்று தேவர்களை எல்லாம் துன்புறுத்திய கயமுகாசுரனோடு போர் புரிந்து தமது வலப்புறத்துக் கொம்பை முறித்து ஆயுதமாக எறிந்து அவ்வசுரனை வதைத்த காலையில், அவ்வசுரன் தம்முருவமாறி மூஷிக வடிவங்கொண் டெழுந்தபோது அதன்மே லாரோகணித்து வாகனமாக்கி அசுரத் துன்பத்தை நீக்கி தேவர்கட்கெல்லா மின்பத்தை விளைவித்தனர். மூஷிக வடிவங்கொண்ட அசுரனை வாகனமாக்கிக் கொண்டமைப்பற்றி மூஷிக வாகனனெனவும், கணங்கட்கெல்லாந் தலைவராயிருத்தல்பற்றி கணபதியெனவும், விக்கினங்களையெல்லாம் நீக்கியருளுதல்பற்றி விக்கினேஸ்வரரெனவும், எவரும் முதலில் வழிபடத்தக்கவராதல்பற்றி விநாயகரெனவும், இன்னும் பற்பல திருநாமங்களோடும் விளங்குவாராயினர். இவர் ஆன்ம கோடிகளை ரட்சிக்கும் பொருட்டாய் பற்பல அவதாரங்களினுஞ் செய்த அற்புத பிரபாவம் அனந்தமாம். (அதனைப் புராணங்களிற் காண்க) இது நிற்க.

தேவர்களெல்லாம் கயமுகாசுரனது அரசாட்சியில் தங்கள் தங்களால் தம் தம் தலையிற் குட்டித் தோப்பணம் போட்டுவந்த வழக்கத்தை விநாயகக் கடவுளுக்குச் செய்து வருவாராயினர். அன்றியும், இலங்கை அழியாதிருக்கத்தக்கதாக அரிய தவஞ்செய்த இராவணன் பரமசிவானுக்ரகத்தால் பெற்று வந்த சிவலிங்கத்தை இலங்கை நகருக்கு கொண்டு செல்லவிடாது தடுத்தல் வேண்டுமெனத் தேவர்கள் விண்ணப்பித்த காலையில் அவர்கள் வேண்டுகோட்கிணங்கி இராவணன் கரத்திற்கொண்டு சென்ற சிவலிங்கத்தை கோகன்ன தலத்திலே ஸ்தாபிதமாயிருக்கச் செய்து, இராவணனை தன் தலையில் தன் இருபது கரங்களாலும் குட்டித் தோப்பணம் போடும்படி செய்தனர். இது மாத்திரமோ! அகஸ்திய முனிவரையும் காவேரி நதியின் பொருட்டு இவவாறே தலையிற் குட்டித் தோப்பணம் போடும்படி செய்தனர். ஆன்ம கோடிகளாகிய நாமெல்லாம் இன்றும் என்றும் நம் விநாயகப் பெருமானது சந்நிதியில் தலையிற் குட்டிக்கொண்டு தோப்பணம் போட்டு வருவது இது பற்றியேயாம். நிற்க; இப்பெருமானைப் புருசுண்ட மஹரிஷி நம்பியாண்டார் நம்பி மெய்கண்ட சிவாசாரியார் ஔவையார் முதலிய பலரும் வழிபட்டுச் சிவானந்தப் பெருவாழ்வு பெற்றுயர்ந்தார்களென்னில், நாமெல்லாம் வழிபட்டு நற்கதி பெற்றுய்ய வேண்டுமென்பது சொல்லவும் வேண்டுமோ? நிற்க.

மற்றொரு காலத்திலே, காசிமாநகரத்திலுள்ள மனைகளிலெல்லாம் ஏககாலத்தில் நம்பெருமான் விருந்துண்டருளிய திறம்பற்றி நம்மனோரெல்லாம் மனை முதலிய எவ்விடங்களினும் திருவுருவங்களமைத்து எக்காலத்தினும் இன்னமுதாகிய வர்க்கம் பலவும் படைத்து நிவேதனஞ் செய்து திருவடி வழிபாட்டைப் பேணி அருள் பெற்று வருவராயினர். நம்மன்னோர்க்கெல்லாம் நேரும் துன்பங்களையெல்லாந் தவிர்த்து இன்பங்களையெல்லா மளிக்கவல்ல நம் விநாயகக் கடவுளை ஒவ்வொருவரும் எக்காலத்தும் வழிபட்டு வருவாராயின், இன்றியமையாப் பெருஞ் செல்வப்பேறுற்று நல்வாழ்வு கூர்ந்திடுதலுண்மை.

இம்மூர்த்தியை வழிபடுபவர்களெவரும் அனுட்டிக்கவேண்டிய விரதங்கள்: சுக்கிரவார விரதம், விநாயக சதுர்த்தி விரதம், விநாயக சட்டி விரதம் என மூன்றும்.

விநாயக பக்தர்.

# முருகக் கடவுளது சட்டிவிரத வரலாறு

இது ஐப்பசிமாதம் சுக்கிலபக்ஷத்துப் பிரதமை முதல் சட்டிவரையிலுமுள்ள ஆறுநாளும் முருகக் கடவுளை முன்னிட்டு அநுட்டிக்கும் விரதமாம். இவ்விரதானுட்டான காலத்தில் ஆறுநாளும் உபவாசம் செய்தல் வேண்டும். அப்படிச்செய்ய இயலாதவர்கள் ஒவ்வொருபோது உணவுகொண்டு சட்டியில் உபவாசமிருத்தல் வேண்டும். எல்லா ஆலயங்களிலும் 6-ம் நாளாகிய சட்டியில் முருகக்கடவுளுக்குச் சூரசங்கார மகோற்சவம் நடத்தல்வேண்டும். இவ்விரதத்தை மெய்யன்புடன் ஆறுநாளும் அநுட்டித்துப் பூர்த்திசெய்து ஏழாம்நாள் அடியவர்களுக்கு மகேசுரபூஜை நடத்தல்வேண்டும். மாதந்தோறும் வரும் சுக்கில பக்ஷத்துச் சட்டி திதியில் முருகக்கடவுளை வழிபட்டுப் பழவர்க்கம், பானகம், மிளகு இவற்றில் இயன்றதொன்றை உட்கொள்ளல் உத்தமமாகும். இச்சட்டிவிரதத்தின் காரணம் முருகக்கடவுள் சூரபதுமனுடன் போர் செய்யத்தொடங்கி ஆறுநாள் போர் செய்து ஆறும்நாள் அவனை வெற்றி கொண்டார் ஆதலானும் அவ்வாறு நாட்களிலும் அச்சூரபதுமனால் துக்கமடைந்துள்ள தேவர்கள் முனிவர்கள் முதலியோர்கள் துயரங் கொண்டு வாடி முருகக்கடவுளைத் துதித்துக்கொண்டிருந்தார்கள். ஆதலானும் வைதிக முறைப்படி அவ்வாறு நாளும் உபவாசமாகவிருந்து அவரது திருப்புராணம் படித்துக்கேட்டு அவரைத் தோத்திரஞ் செய்து கொண்டிருப்பது வழக்கம். ஐப்பசி மாத சட்டித் திதியில் சூரபதுமனை இரு கூறுகப் பிளந்து வலப்புறமாகிய மயிலை வாகனமாக இவர்ந்து தேவர்கள் முனிவர்களுக்குக் காட்சி கொடுத்தார். ஆதலால் ஐப்பசி மாதச் சட்டியில் பிற்பொழுது மயில்வாகனத்தில் முருகக் கடவுளைத் தரிசனஞ் செய்தல் மேலாகிய சிவபுண்ணியமாகும். சூரபதுமன் முதலிய அவுணர்களை அடியோடு களைந்து தேவர்கள் முனிவர்களை அவனால் நியமித்த சிறையைத் திறந்துவிட்டு இந்திரனைப் பழையபடி சுவர்க்கத்தில் முடி சூட்டிக் குடியேற்றி வைத்த இப்பெருமானது விரதமாதலால் இவ்விரதத்தை மெய்யன்போடு அனுட்டிக்கின்றவர் சத்துருசயம், இராச வசீகரம், நன்மக்கட்பேறு, மரண பயமின்மை முதலிய சுகங்களைப் பெற்றுப் பின் மறுமையின்பத்தையும் பெற்றுய்வார்கள். அரகர சிவசிவகுமாராயநம.

சண்முக தாசர்.

## சிவஞான போதம்

### பன்னிரண்டாம் சூத்திரம்—ஒழிபு அதிகாரணம்

(8-வது மலரின் 219-வது பக்கத் தொடர்ச்சி.)

வெண்பா.

*வினையா லசத்து விளைதலான் ஞானம்*
*வினைதீரி னன்றி விளையா—வினைதீர*
*ஞானத்தை நாடித் தொழவே யதுநிகழு*
*மானத்தா லன்பிற் றொழு.*

(இ - ள்) வினையால் அசத்து விளைதலான் = பிராரத்தவினை வாசனையால் பிரபஞ்சத் தோற்றம் மேம்படலால்—வினை தீரினன்றி ஞானம் விளையா = பிராரத்தவினை வாசனை யொழிந்தாலன்றி (மெய்யுணர்வின் பயனாகிய) சிவத்தோற்றம் மேம்படுதல் உண்டாகாது—(ஆதலால்) வினைதீர = அப்பிராரத்தவினை பற்றறக் கழியும்பொருட்டு—ஞானத்தை நாடித் தொழவே அது நிகழும் = அம்மெய்யுணர் வுடையாரை நாடி வழிபடவே (அப்பிராரத்தவினை நீங்கி) மெய்யுணர்வு மேம்பட்டு நிகழும்—ஆனத்தால் = ஆனதனால்—அன்பின் தொழு = (அவரை) அன்பினால் வழிபடுவாயாக (எ - று.)

*தன்னை யறிவித்துத் தான்றானச் செய்தானைப்*
*பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே*
*தானேதா னச்செய்துந் தைவமென்றுந் தைவமே*
*மானே தொழுகை வலி.*

(இ - ள்) தன்னையறிவித்து = (தன் உண்மை யறியமாட்டாது குருடாய்க்கிடந்த உயிர்க்குப் பலவழியானும்) அதனை அறிவித்து—தான் = (மிகவும் எளிய) அவ்வுயிரை—தான் ஆச் செய்தானை = (மிகவும் அரிய பொருளாகிய) தானாகும் வண்ணம் செய்தளித்த குருமூர்த்தியின் பேருதவியை—பின்னர் மறத்தல் = அதன்பின் மறத்தல்—பிழையலது = (இதற்குமுன் அறியாமையால் மறந்த குற்றம்போல்) ஒழியக் கூடிய குற்றமன்று—(ஆதலானும்)—முன்னவன் தானே தானச் செய்தும் = முதல்வன் அவ்வாறு உயிராகிய தன்னைப் பதியாகிய தானேயாகச் செய்தானும்—தைவம் என்றும் தைவமே = (இதுகாறும் தனக்குச் சுதந்திரமின்றி முதல்வனது உபகாரத்தை அவாவி அடிமையாயிருந்த) உயிர் எக்காலத்தும் (அதாவது சிவத்தன்மை நீங்கிச் சிவத்தன்மை

யடைந்தவிடத்தும்) அவ்வாறு அடிமையேயாம் — (ஆதலாலும்) — மானே = (ஞானசிரியனாகிய) அப்பெரியோனை—தொழுகை வலி = வழி படுதலே அவ்வுயிர்க்கு வலியாவது (எ - று.)

ஆன்மா முத்தியிலும் சிவத்தின் அடிமை யென்பதை "மீளா வடிமை யுமக்கே யாளாய்" என்னும் சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத் தாலும், "சங்கவெண் குழையோர் காதிற் கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே" என்னும் திருத்தாண்டகத்தாலும் அறிக.

முன்னவனே என்பதில் ஏகாரம் அசைநிலை. மற்ற ஏகாரங்கள் தேற்றம்.

தைவம் = தேவனதுடைமை.
மான் = மஹான் = பெரியோன்.
மானே தொழுகை = அப்பெரியோனை வழிபடுதலே.
தானைச் செய்தும் = தானாகச் செய்தாலும்.
வலிதருவதனை வலியென்றுபசரித்தார்.

இவ்வெண்பாவினால் சீவன் முத்தர்க்கும் சிவதேசிகன் வழிபாடு அவசியமென்பது உணர்த்தியவாறும்.

சிவமென்னு மந்தரா சிந்தைநேர் நோக்கப்
பவமின்றாங் கண்வா சகத்திற்—சிவமுண்டா
மொன்று மிரண்டு மலத்தார்க்கிங் கொண்குருவா
லின்றிந்நூன் மும்மை மலர்க்கு.

(இ - ள்) சிவம் என்னும் அந்தரா = (சீவன் என்னும் தன்மையி னின்றும் நீங்கிச்) சிவம் என்று ஓதப்படும் வேதாந்தத் தெளிவாகிய சித் தாந்தத்தையுடைய மாணவகனே = ஒன்றும் இரண்டும் மலத்தார்க்கு = ஒன்றும் இரண்டும் ஆய மலங்களையுடையவர்க்கு (அதாவது ஆணவ மலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலருக்கும் ஆணவமும் கன்மமும் ஆகிய இருமலமுடைய பிரளயாகலருக்கும்) = சிந்தை நேர் நோக்க கண் வாசகத்தின் பவம் இன்று ஆம். சிவம் உண்டாம் = (முதல்வன்) முறையே அறிவின் கண் நின்று அருட்பார்வையில் நோக்குதலாலும், தேவகுரு வாய் முன் நின்று செய்யும் திருநோக்கம் (பரிசம்) வாக்கு எனப்படும் தீக்கையாலும் பிறவிக்கு ஏதுவாய பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் விளங்கும்—(ஆதலால்)—மும்மை மலர்க்கு இங்கு ஒண்குருவால் இன்று இந்நூல் = மும்மலமுடைய சகலர்க்கே உரித்து இவ்வுலகத்து அனுபவ முடைய தேசிகராற் போதிக்கப்படும் இச்சிவஞான போதநூல். (எ-று)

அந்தம் = வேதாந்தம். அந்ததரம் = சித்தாந்தம். சித்தாந்தத்தைப் பெற்ற பெரியோர் பெருமை கூறுவார் "சிவமென்னும் அந்ததர' என்றார். சிவம் என்னும் = சிவம் எனப்படும்.

சிந்தை = அறிவின்கண். நேர் நோக்குதலாவது முன்னிருந்த மருட் பார்வையைப் போக்கி அருட்பார்வையால் நோக்குதல். நோக்க = நோக்குதலால். இந்நூல் அனுபவமுடைய தேசிகனாலன்றி விளங்காதென்பார் ஒண் குருவால் என்றார்.

இன்று இந்நூல் = "இக்காலத்து உரைக்கப்பட்ட நூல்" எனினும் அமையும்.

மும்மை = மூன்று. மும்மைமலத்தார் சகலர்.

---

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

இதின் 24-வது வருடாந்த மகாஜனக்கூட்டம் நிகழும் 1923ஹு மேமீ 13௳ மாலை 4-மணிக்கு இதின் சபா மண்டபத்தில் கூடிற்று. அப்போது ஸ்ரீமான்-சதுரை. இராஜாகண்ணு முதலியாரவர்கள் B. A. அக்கிராசனம் வகித்தார்கள். ஸ்ரீ நடராஜப் பெருமானுருக்கு ஆராதனையும் தமிழ்வேத பாராயணமும் செய்தபின் அச்சிட்டு முன்னமே சபையினர் யாவருக்கும் அனுப்பப்பட்டிருந்த 1922ஹு சபாக்கிரந்தம் வாசித்து அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் (Savite Elementary School) பாடசாலைப் பிள்ளைகளுக்குப் புத்தகப் பரிசளிக்கப்பட்டது. அதன் பின் கீழ்க் கண்டவர்கள் நிருவாக சபையினராக நியமிக்கப் பட்டார்கள்.

**சபைத்தலைவர்**

ஸ்ரீமான் சதுரை. இராஜாகண்ணு முதலியாரவர்கள் B.A.,
Retired Supt., Accountant General's office.

**உதவி சபைத்தலைவர்கள்**

" கா. ரா. நமசிவாய முதலியாரவர்கள்,
Lecturer in Tamil, Queen Mary's College.

" R. காசி விசுவநாத முதலியாரவர்கள்,
Hony., Magistrate & Merchant.

**காரியதரிசி**

" இ. ஆதிமூல முதலியாரவர்கள்,
Editor of the "Saivam" and Retired Accountant,
Military Accts., Dept.

### உதவி காரியதரிசி

ஸ்ரீமான் C. M. மீனாட்சிசுந்தர முதலியாரவர்கள், வர்த்தகர்.

### சைவபாடசாலை யதிபர்

" R. சண்முக முதலியாரவர்கள்,
Clerk, Messrs. Parry & Co., Ltd.,

### பொக்கிஷதாரர்

" வா. தி. கோவிந்தராஜ முதலியாரவர்கள்,
Clerk, Legislative Council office.

### புத்தகசாலை யதிபர்

" N. அப்பாதுரை முதலியாரவர்கள், Clerk, Post Office.

### அத்தியட்சர்கள்

" திரு. சபாபதி முதலியாரவர்கள், Retired Sub-Engineer.

" சண்முகசுந்தர முதலியாரவர்கள்,
Preventive Officer, Sea Customs Office.

" T. முத்துசாமி முதலியாரவர்கள்,
Clerk, Port Trust Office.

" P. M. முருகேச முதலியாரவர்கள்,
Manager, Caxton Press.

" ரா. பி. துரைசாமி முதலியாரவர்கள், Govt. Pensioner.

" P. இராஜு முதலியாரவர்கள்
Clerk, General Post Office.

" இ. கண்ணப்ப முதலியாரவர்கள், Land-lord

### கணித பரிசோதகர்

" கூ. சிவ. வாசுதேவ முதலியாரவர்கள்,
Retired Accountant, M. & S. M. Ry.

ஸ்ரீமான் N. அப்பாதுரை முதலியாரவர்கள் "உண்மை, உறுதி, அஞ்சாமை" என்னும் விஷயமாய் உபந்நியாசம் செய்தார்கள்.

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

# 24-வது வருடத்துச் சபாக்கிரந்தம்

(1922ஆு—துன்மதி—துந்துபி)

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீய தெல்லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## முன்வருடப் பூர்த்தி விழா

இவ்விழா 1922ஆு எப்ரல்மீ 2உ ஆதிவாரம் பகல் 4-மணி தொடங்கி, சென்னை சௌந்தரிய மஹாலில் நடைபெற்றது. ஸ்ரீமான் Sir. M. C. T. முத்தைய செட்டியாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அப்போது திருக்கூட்டத்தின் 1921ஆு சபாக்கிரந்தமும் வரவு செலவு கணக்கும் வாசித்து அங்கீகரிக்கப்பெற்றன. சைவ பாடசாலை மாணவர் இருவர் ஆஸ்திக நாஸ்திக வாதம் புரிந்தார்கள். பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகப் பரிசளிக்கப்பட்டது. சுவாமி வேதாசலம் அவர்கள், முப்பொருளுண்மையை விளக்கி உபந்நியசித்துச் சைவ ஆங்கில பாடசாலைகள் வைத்து அவற்றின் மூலமாய்ச் சிறுவர்களுக்குச் சைவ சமய போதனை செய்வதைக் காட்டிலும் மேலான தருமம் வேறொன்றும் இல்லையென்பதை நன்கு விளக்கினார்கள். ஹைகோர்ட்டு வக்கீலும் மதராஸ் சட்டசபையினருமாகிய ஸ்ரீமான் யஸ். சோமசுந்தரம் பிள்ளையவர்களும், சென்னை நகரபரிபாலன சபையங்கத்தினர் ஸ்ரீமான் A. C. பார்த்தசாரதி நாயுடு அவர்களும், தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் மணி திருநாவுக்கரசு முதலியாரவர்களும் ஆங்கில பாடசாலைகள் வைத்துச் சைவ சமய போதனை செய்வது இன்றியமையாததென்பதை மிகவும் வற்புறுத்திப் பேசினார்கள்.

அக்கிராசனரவர்கள் தமது மரபினர் செய்யும் அரிய தருமங்களைக் குறிப்பிட்டு, மாணவர் செய்த சம்வாதத்தைப் புகழ்ந்து, சுவாமி வேதாசலம் அவர்கள் செய்த உபந்நியாசத்தைப் பாராட்டி, திருக்கூட்டத்தினர் செய்து வரும் சமய பரிபாலனத்தை மெச்சி, தாம் திருக்கூட்டத்தின் போஷகராயிருக்க அன்புகூர்ந்து இசைந்தார்கள்.

தமது மஹா மண்டபத்தை உதவிய திவான் பஹதூர் சல்லா குருசாமி செட்டியாரவர்கள் முதலிய பல கனவான்களும் சீமாட்டிகளும் வந்திருந்து கௌரவித்தார்கள்.

---

## மகா சபையார்.

| | | |
|---|---|---|
| இம்மகாசபையில் 1922ஹூ ஆரம்பத்திலிருந்தவர்களின் தொகை. | | 48 |
| 1922ஹூ | சேர்ந்தவர்கள் | 160 |
| ,, | நீங்கினவர்கள் | 38 |
| ,, | முடிவிலிருந்தவர்கள் | 170 |

இவர்கள் பெயர் முதலியன இதினீற்றில் காட்டப்பட்டுள்ளன. இவர்களுள் உதவி சபைத்தலைவராயிருந்த ஸ்ரீமான் தி. த. கனகசுந்தரம் பிள்ளை B. A. அவர்கள் சிவபதமடைந்தமை வருந்தற்பாலதாம்.

| | | | |
|---|---|---|---|
| 1921ஹூ | மகா சபையார் உபகரித்த சந்தா | ரூபா | 200 |
| 1922ஹூ | ஷை ஷை | ,, | 473 |

இவற்றால் இச்சபை சென்ற வருடத்தில் அதிக அபிவிருத்தியடையப்பெற்றதென்பது விளங்கும்.

---

## Rao Bahadur S. Rathnavelu Chettiar's Saivite Elementary School

பாடசாலை—இதில் 5-வகுப்புகள் இருக்கின்றன. மூன்று உபாத்தியாயர்களால் தமிழும் தெலுங்கும் ஆங்கிலமும் சைவ சமய பாடங்களும் கற்பிக்கப்பட்டன. இப்பாடசாலையில்.

| | | |
|---|---|---|
| 1922ஹூ | ஆரம்பத்திலிருந்த சிறுவர்களின் தொகை | 60 |
| ,, | சேர்ந்தவர்கள் | 70 |
| ,, | நீங்கினவர்கள் | 64 |
| ,, | கடைசியிலிருந்தவர்கள் | 66 |

| | | |
|---|---|---|
| 1921ஹு பிள்ளைகள் கொடுத்த சம்பளம் | ரூபா | 184 |
| 1922ஹு ஷை ஷை | ,, | 244 |
| 1921ஹு அரசாங்கத்தார் (1920-21 வருடத்திற்காக) உபகரித்த தொகை | ,, | 144 |
| 1922ஹு அரசாங்கத்தார் (1921-22 வருடத்திற்காக) உபகரித்த தொகை | ,, | 360 |
| ,, அரசாங்கத்தார் (1922-23 வருடத்திற்காக) முதன் முறை உபகரித்த தொகை | ,, | 223 |
| ஆகமொத்தம் | ,, | 583 |
| 1921ஹு நேர்ந்த சாதாரண செலவு | ரூபா | 505 |
| 1922ஹு ஷை ஷை | ,, | 652 |
| ,, அரசாங்கத்தார் மூலமாக பாடசாலைக்கு நிலம் வாங்கினதினால் நேரிட்ட விசேட செலவு | ,, | 3709 |
| ஆகமொத்த செலவு | ,, | 4361 |

இடவசதிக்குறைவால் அதிக பிள்ளைகளைச் சேர்க்க இயலாவிடினும் இப்போது (1923ஹு பிப்ரவரிமீ 28உ) பிள்ளைகள் இருக்கிறார்கள்.

இப்பாடசாலையை முதற்றரப் பாடசாலையாக்குவதற்கு வேண்டிய விசாலமாக கட்டடம் கட்டவேண்டி சென்னை பட்டாபிராம ஐயர் வீதியில், பாடசாலைக்கு மிகவும் வாய்ப்பான இடத்தில், அரசாங்கத்தார் மூலமாக 3615 கொடுத்து, 3 மனை 825 சதுர அடி உள்ள காலி மனையை 1922ஹு ஜூன்மீ 27உ தங்கள் வசப்படுத்தி வைத்துக் கொண்டார்கள்.

1922ஹு மேமீ 3உ அரசாங்கப் பாடசாலைப் பரிசோதகர் இப்பாடசாலையைப் பரீக்ஷித்தனர்.

சென்ற வருடோற்சவ காலத்தில் பிள்ளைகளுக்குப் பரிசளித்தற்பொருட்டு Caxton அச்சுக்கூடத்ததிபர் புத்தகங்கள் கொடுத்து உபகரித்தார்கள்.

## சைவம்

"சைவம்" எனப் பெயரிய இப்பத்திரிகையின் முதல் ஆறு மலர்கள் ஜனவரிமீ தொடங்கி டிசம்பர்மீ இறுதியாக ஒரு புத்தகமாகு மாறு அச்சிட்டு வெளியிடப்பட்டன. 1920௵ அச்சுக்கூடச் சம்பந்த மாக நேர்ந்த இடையூறுகளால், 7-வது மலரிலிருந்து சித்திரைமீ தொடங்கி பங்குனிமீ இறுதியாக ஒவ்வொரு மலரும் அச்சிடப்படு கின்றது. சென்ற வருடத்திலும், அதற்கு முன் வருடத்தில் வெளி யிடப்பட்டது போலவே, போதுமான சந்தாதாரர்களில்லாமையால் இரு முறை ஒரு மாதப்பத்திரிகையை இருமாதப் பத்திரிகையாக இலக்க மிட்டு வெளியிட நேர்ந்தது.

இப்பத்திரிகைக்குக் கடந்த வருடத்தில் தஞ்சைமாநகர் ஸ்ரீமான் Rao Bahadur K. S. ஸ்ரீநிவாசப் பிள்ளையவர்கள், 10 ரூபா நன் கொடை யளித்தார்கள். இவர்களும் திரிசிரபுரம் தி. சாம்பசிவம் பிள்ளை யவர்களும் விஷயதானங்கள் செய்தார்கள்.

| | | |
|---|---|---|
| 1921௵ பத்திரிகையின் வருடாந்தச் சந்தாதாரர்கள் | | 480 |
| 1922௵ ஷை ஷை | | 382 |
| ,, ஆயுள் சந்தாதாரர்கள் | | 201 |
| 1921௵ பத்திரிகையினால் வரவு, முன் வருடப் பத்தி ரிகை விற்பனை வரவோடு | ரூபா | 790 |
| 1922௵ ஷை ஷை | ,, | 652 |
| 1921௵ பத்திரிகையினால் நேர்ந்த செலவு | ,, | 1105 |
| 1922௵ ஷை ஷை | ,, | 707 |

1920௵ பத்திரிகையின் இதழ்கள் சில 1921௵ அச்சிடப் பட்டமையால், 1921௵ செலவு அதிகமாயிற்று.

---

## வட திருமுல்லைவாயில் வசந்தமஹோற்சவம்

இந்த மகோற்சவம் துந்துபி௵ வைகாசிமீ 29உ (11-6-22) ஆதிவாரம் மிகச் சிறப்பாக இத்திருக்கூட்டத்தினரால் நடத்தப்பெற் றது. அன்று காலையில் ஸ்ரீ மாசிலாமணீசுரருக்கும் கொடியிடையம் மையாருக்கும் உபயவேத பாராயணத்துடன் உருத்திராபிஷேகமும், இரவில் திருவீதி மகோற்சவமும், மாலையில் சைவ மகோபந்நியாசங் களும், காலையில் வந்திருந்த சிவபக்தர்களுக்குச் சிற்றுண்டி விநியோக

மும், பகலில் மாகேசுரபூஜையும், இரவில் சித்திரான்ன வினியோகமும் நடைபெற்றன. (புதுப்பாக்கம்) குமாரபுரம் சிவசுப்பிரமணிய பக்தஜன சபையாரும், சண்முக ஞானபுரத் தேவாரபாராயண சபையாரும் வந்திருந்து தமிழ்வேத பாராயணம் செய்தார்கள். Supdt, Accountant General's office, Rangoon, ஸ்ரீமான் பாலசுப்பிரமணிய முதலியாரவர்களும், இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் அவைத் தலைவர் ஸ்ரீமான் திரு. வி. உலகநாத முதலியாரவர்களும், ஸ்ரீமான் M. A. சோமசுந்தர முதலியாரவர்களும், ஸ்ரீமான் S. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L. T., அவர்களும் உபந்நியாசங்கள் செய்தார்கள்.

இவ்வுற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற வேண்டி ஸ்ரீமான் C. சுப்பராய முதலியாரவர்கள் (Head Draftsman, Municipal Engineer's Office, Mandalay) தாம் பத்து ரூபா உபகரித்ததோடு, பிறரிடமும் மெய்வருத்தம் பாராது பொருள் சேகரித்து நூறு ரூபா வரையில் அனுப்பி உபகரித்தார்கள். அன்றியும், பின்வரும் வருடங்களிலும் இவ்வாறே உதவிசெய்து சிறப்பிக்க அன்புகூர்ந்து வாக்களித்துள்ளார்கள்.

இராயபுரம் ஸ்டோர் ஷெட் ஸ்ரீமான் முருகேச முதலியாரவர்கள் Band வாத்தியத்திற்கு 20 ரூபா கொடுத்ததுமன்றி, தமது வேலையாட்கள் சகிதமாக வந்து முன்னிருந்து எவ்வகைப்பட்ட தொழில்களையும் தாமே ஏற்று நடத்துவித்தார்கள்.

சென்னை பூக்கடை மல்லீசுரர் கோவில் ஸ்ரீமான் லோகநாத முதலியாரவர்களும், சந்திரா கம்பெனியதிபரும் எலெக்ட்ரிக் சாமான் வர்த்தகருமாகிய ஸ்ரீமான் தி. சந்திரசேகர முதலியாரவர்களும் 35 ரூபா வரையில் செலவிட்டுப் புஷ்பச் சாத்துப்படி கைங்கரியம் செய்தார்கள்.

ஸ்ரீமான் நந்தியம்பாக்கம் ஆதிமூல முதலியாரவர்கள் உயர்ந்த பச்சையரிசி ஒரு மூட்டையும், ஸ்ரீமான் பரங்கிமலை அப்பாதுரை முதலியார் குமாரர் இரத்தின சபாபதி முதலியாரவர்கள் (Binny & Co.,) சேலை, அங்கவஸ்திரம், நைவேத்திய சம்பாரங்கள், அபிஷேக நல்லெண்ணெயும் ஒரு ரூபாவும், வர்னகடை ஸ்ரீமான் துரைசாமி முதலியாரவர்கள் மத்தாப்பும், கொத்தவால்சாவடி வர்த்தகர் ஸ்ரீமான் நித்தியானந்த முதலியாரவர்கள் 3 மணங்கு கத்திரிக்காய்களும், தேங்காய் கிடங்கு ஸ்ரீமான்கள் ஆலம்பரை அப்பாயி நாயுடு அண்டு ஸன்ஸ் தேங்காய் 20, ரொக்கம் ரூபா ஒன்றும், வெற்றிலை வர்த்தகர் பார்த்தசாரதி முதலியாரவர்கள் 1 கட்டு வெற்றிலையும், ஸ்ரீமான் நாராயணசாமி நாயுடு அவர்

கள் (பொடி வியாபாரம்) கர்ப்பூரமும் சாம்பிராணியும், பூவிருந்த வல்லி யையடுத்த ஐயப்பந்தாங்கல் ஸ்ரீமான் த. சபாபதி முதலியாரவர்கள் 12 ரூபாவுக்கு தயிரும், ரொக்கம் 3 ரூபா 12 அணவும், ஷை ஸ்ரீமான் த. சபாபதி முதலியார் மூலமாக ஸ்ரீமான் ப. ல. முருகேச நாயகர வர்கள் 15 படி புழுங்கல் அரிசி, ஸ்ரீமான் ப. ல. இராகவ நாயகரவர்கள் 12 படி புழுங்கல் அரிசி, ஸ்ரீமான் ப. கொ. கிருஷ்ணசாமி நாயகரவர்கள் 25 படி புழுங்கல் அரிசி ஸ்ரீமான் பரணிபுத்தூர் ஏழுமலை பிள்ளையவர் கள் 9 படி தயிரும், பரணிபுத்தூர் சாம்பசிவம் பிள்ளையவர்கள் ஒரு ரூபா வும், ஸ்ரீமான் இரத்தின முதலியார் மூலமாக ஸ்ரீமான் சண்முக முதலி யாரவர்கள் ஒரு கட்டு வாழையிலையும், வைத்தியநாத முதலிவீதி ஸ்ரீமான் சின்னசாமி பிள்ளையவர்கள் சந்தனம், பச்சை கர்ப்பூரம், குங்குமப்பூ, பனிநீர், ஏலக்காய், கற்கண்டும், ஷை வீதி ஸ்ரீமான் இருக்கம் பாலசுந் தர முதலியார் உயர்ந்த மந்தாரை இலை கட்டு இரண்டும், பட்டு ராசப்ப முதலி வீதி ஸ்ரீமதி மீனம்பாள் அம்மாளவர்கள் பத்து ரூபா செலவிட்டு 1½ வீசை நெய்யும், வேண்டிய காய்கறி வகைகளும், ஸ்ரீ சுந்தர தேசிகர் 1 புட்டி உயர்ந்த பன்னீரும், கவர்ன்மெண்டு பென்ஷ னர் ஸ்ரீமான் ரா. பி. துரைசாமி முதலியாரவர்கள் 1 புட்டி உயர்ந்த பன்னீரும், ஸ்ரீமான் தேவாரம் மா. தங்கவேல் பிள்ளையவர்கள் மூலமாக புரசை Binder ஸ்ரீமான் இரத்தின சபாபதி முதலியாரவர்களும், ஸ்ரீ இ. முனிசாமி முதலியாரவர்களும், ஸ்ரீமான் இராஜகோபால முதலி யாரவர்களும் ஒரு வீசை நெய்யும், ஒருடின் தீப எண்ணெயும், கலெக் டர் கச்சேரி ஸ்ரீமான் ஜெயராம முதலியாரவர்கள் ஒரு பெரிய பலாப் பழமும், சென்னை பாளையப்பன் வீதி ஸ்ரீமான் T. பாலு முதலியாரவர் கள் 100 வாழைக்கனிகளும், வர்னகடை ஸ்ரீமான் முருகேச முதலியார வர்கள் அரை வீசை பாக்கும், Clearing Agent ஸ்ரீமான் முனிசாமி முதலியாரவர்கள் பூசினிக்காய்களும் கொடுத்தார்கள்.

இராயப்பேட்டை சாது அச்சுக்கூடத்தலைவர்கள் போஸ்டர் விளம்பரப் பத்திரிகைகளையும், சாதாரண விளம்பரப் பத்திரிகைகளை யும் இலவசமாக அச்சிட்டுக் கொடுத்தார்கள்.

இவையன்றியும் ரொக்கமாகப் பொருளுதவி செய்தவர்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஸ்ரீமான் தங்கவேல் முதலியாரவர்கள் Burmah oil & Co | 10 | 0 | 0 |
| „ பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் Supdt., Accountant General's Office Rangoon | 10 | 0 | 0 |

| | |
|---|---|
| Head Draftsman Municipal Engineer's Office | ரூ. அ. பை. |
| ஸ்ரீமான் C. சுப்பராய முதலியாரவர்கள் | 10 0 0 |
| ஷியார் மூலமாக ஷி ஆபீஸ் Head Clerk and Accountant ஸ்ரீமான் M. ஜகந்நாத முதலியாரவர்கள் | 10 0 0 |
| ஸ்ரீமான் S. A. K. M. நடேசன் செட்டியாரவர்கள் Banker and Money Lender Mandalay | 10 0 0 |
| ,, S. R. M. M. C. T. வெங்கடாசலம் செட்டியாரவர்கள் ஷி ஷி | 10 0 0 |
| ,, S. R. M. M. R. M. பழனியப்ப செட்டியாரவர்கள் ஷி ஷி | 7 0 0 |
| ,, S. R. M. M. A. வயிரவன் செட்டியாரவர்கள் ஷி ஷி | 7 0 0 |
| ,, S. M. அழகப்பச் செட்டியாரவர்கள் ஷி ஷி | 5 0 0 |
| ,, S. R. M. S. கருப்பன் செட்டியாரவர்கள் ஷி ஷி | 5 0 0 |
| ,, C. T. A. R. A. சோமசுந்தரம் செட்டியார் ஷி ஷி | 3 0 0 |
| ,, V. P. இலட்சுமணன் செட்டியாரவர்கள் ஷி ஷி | 5 0 0 |
| ,, P. N. C. P. வரதராஜா அவர்கள் ஷி ஷி | 5 0 0 |
| ,, A. R. C. முருகப்பச் செட்டியாரவர்கள் ஷி ஷி | 5 0 0 |
| ,, S. A. S. M. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் Money Lender Mandalay | 5 0 0 |
| ,, R. M. R. M. சாமிநாதன் செட்டியாரவர்கள் ஷி ஷி | 2 0 0 |
| ,, A. A. V. கிருஷ்ணப்பச் செட்டியாரவர்கள் Money Lender, Kylal | 3 0 0 |
| ,, V. E. A. R. முத்தையா பிள்ளையவர்கள் ஷி Mandalay | 5 0 0 |
| ,, A. L. A. இராமலிங்க தேவரவர்கள் ஷி ஷி | 4 0 0 |

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஸ்ரீமான் அப்பாதுரை முதலியார் Mannady Post Office | 2 | 0 | 0 |
| ,, Post Master ,, | 0 | 8 | 0 |
| ,, சீநிவாச்சாரியார் ,, | 0 | 8 | 0 |
| ,, பத்மநாப முதலியார் ,, | 0 | 8 | 0 |
| ,, பெரம்பூர் அப்பாதுரை முதலியாரவர்கள் | 1 | 0 | 0 |
| ,, தி. குப்புசாமி முதலியாரவர்கள் Mail Sorter | 5 | 0 | 0 |
| ,, இராசு முதலியாரவர்கள் General Post Office | 3 | 12 | 0 |
| ,, முருகேசம் பிள்ளையவர்கள் M. & S. M. Ry., Audit Office | 1 | 14 | 3 |
| ,, A. கோவிந்தசாமி பிள்ளையவர்கள் வெங்காய வர்த்தகம் | 1 | 0 | 0 |
| ,, வண்ணாரப்பேட்டை ரா. தாண்டவராய முதலியாரும் ஸ்ரீமதி பாப்பாத்தியம்மாளும் | 4 | 0 | 0 |
| ,, தியாகராஜ முதலியாரவர்கள் M. T. Rajen & Co. | 2 | 0 | 0 |
| ,, தெய்வசிகாமணி முதலியாரவர்கள் Merchant | 1 | 0 | 0 |
| ,, மயிலை முருகேச முதலியாரவர்கள் Pensioner | 1 | 0 | 0 |
| ,, தி. முத்துசாமி முதலியாரவர்கள் ஆச்சாரப்பன் வீதி | 1 | 0 | 0 |
| ஸ்ரீமதி B. நாகரத்தினம்மாள் சங்கீத பண்டிதை | 2 | 0 | 0 |
| ஸ்ரீமான் - T. C. அரங்கநாத முதலியாரவர்கள் Government Press | 4 | 0 | 0 |
| ,, பூ. சம்புலிங்க முதலியாரவர்கள் | 1 | 0 | 0 |
| ,, முருகேசம் பிள்ளையவர்கள் பாளையப்பன் வீதி | 0 | 9 | 0 |
| ,, பல்லாவரம் வேலு முதலியார் மூலமாகவும், சீதாராம முதலியார் மூலமாகவும், நூல் வர்த்தகர்கள் ஸ்ரீமான் க. கொ. இராகவைய செட்டியார் | 10 | 0 | 0 |
| ,, சோடாபாய் ஜமர்பாய் | 7 | 0 | 0 |
| ,, நாகோஜி புருஷோத்தம் & Co., | 5 | 0 | 0 |
| ,, வெ. கொ. சேஷாசலம் செட்டியாரவர்கள் | 5 | 0 | 0 |
| ,, தோதாத்ரி முதலியாரவர்கள் தங்கசாலை வீதி | 1 | 0 | 0 |
| ,, திரு - சின்னசாமி ஐயரவர்கள் வீராசாமி பிள்ளை வீதி | 2 | 0 | 0 |

பூந்தமல்லி ஐயப்பந்தாங்கல் த. சபாபதி முதலியாரவர்கள் பெருந்துணையாயிருந்து நடத்தினார்கள்.

---

## யாத்திரை

### 1922ஆம் இரண்டு யாத்திரைகள் செய்யப்பட்டன.

முதலாவது திருவொற்றியூர் யாத்திரை - இது 1922ஆம் ஆகஸ்டுமீ 22, 23உ நடைபெற்றது. அப்போது தமது சஷ்டிபூர்த்தி சம்பந்தமாக இவ்விடம் வந்திருந்த ஸ்ரீமான் அரு. அரு. சோம சோம சுந்தரம் செட்டியாரவர்கள் திருக்கூட்டத்தின்மீது வைத்த பேரன்பி னால் இவர்கள் தங்கள் சொந்த செலவில் போஜனத்தினிமித்தம் முன் னமே செய்வித்திருந்த ஏற்பாடுகளைத் தடுத்துத் தாமே மாகேசுரபூசை செய்வித்துபகரித்தார்கள்.

இரண்டாவது திருத்தணிகை, அரக்கோணம், திருவாலங்காட்டு யாத்திரைகள். இவை 1922ஆம் டிசம்பர்மீ 24,25 ஆம் தேதிகளில் நடைபெற்றன.

இத்திருக்கூட்டத்தினர் டிசம்பர்மீ 23உ சனிவாரம் மாலை சென் னையினின்றும் புறப்பட்டுத் திருத்தணிகையை யடைந்து ஆதிவாரம் முருகப்பெருமானுர்க்கு மகாபிடேகாதியுபசாரங்கள் செய்து வழிபட் டுத் திரும்பி அன்றிரவு 7½ மணிக்கு அரக்கோணம் ரெயில்வே ஸ்டே ஷனையடைதலும், அந்நகர்ச்சிவநேயர்களும் ஸ்ரீமான் டி. கோபாலச் செட்டியாரவர்கள் B. A. (Pleader), தாசீல்தாரர் அவர்கள், ஸப் மாஜிஸ்ட்ரேட் அவர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்கள், ஓவர்சியர் அவர்கள் முதலிய உத்தியோகத்தினர் பலருமாக எண்ணிறந்தவர்கள் ரெயில்வே ஸ்டேஷனில் சிறிதும் வெற்றிடமிராதபடி நிரம்பி எதிர் கொண்டு, அழகிய தோரணங்களாலும், வரவேற்புரைகளாலும், வாழ்த்துவசனங்களாலும் மிகவும் அலங்கரிக்கப்பட்டிருந்த வீதிகளின் வழியாக, திருமுறை மகோற்சவ சகிதமாக, பலவித வாத்தியங்கள் கோஷிக்கவும், கொடிகள் எங்கும் மிடைந்து அசையவும், குடைகள் கவியவும் சர்வாடம்பரமாக நகர்வலஞ் செய்வித்து, அந்நகரத்துத் திருக் கோயிலில் வழிபாடாற்றுவித்து, அத்திருக்கோயிலிலும் சைவப்பிரசங்க சபாக் கிருகத்திலும் தாம்பூலம், பழம், சந்தன முதலியன வழங்கி யுப சரித்து, நகர மகா மண்டபத்தில் அமர்வித்து, ஸ்ரீமான் டி. கோபால செட்டியாரவர்களியற்றிய வரவேற்புச் செய்யுளை யரங்கேற்றி, அறுசுவை யமுதருத்தி உபசரித்தார்கள். பின்னர் திருக்கூட்டத்தினர் காலவள விற்கேற்பச் சிறிதுநேரம் உபந்நியாசங்கள் செய்து, தங்களையுபசரித்த அந்நகர வாசிகளின் அன்பை மிகவும் வியந்து பாராட்டி வந்தனமளித் துப் பின் சிறிது போழ்து நித்திரை செய்து, அடுத்த சோமவாரம்

வைகறையிற் பிரயாணப்பட்டுப் புகைரதமூர்ந்து சென்று திருவாலங் காட்டை யடைந்து அம்மையப்பருக்கு மகாபிடேகாதி யுபசாரங்கள் செய்து வழிபட்டு அன்று மாலை திரும்பிச் சென்னைமாநகரடைந் தார்கள்.

திருத்தணிகையில் Post Master அவர்கள் மிகவும் பிரயாசை யெடுத்துக்கொண்டு இடம் ஏவல் முதலியன சித்தப்படுத்தி வைத்தது மாத்திரமன்றி தமது சொந்தத்தில் 11 ரூபா வரையில் செலவும் செய் தார்கள். அவ்விடத்தில் சத்திரத்திருப்பணி நடத்தும் ஸ்ரீமான் தக் கோலம் கு. ஆலங்காட்டு முதலியாரவர்கள் யாத்திரையை உடனிருந்து நடத்திச் சிறப்பித்ததுமன்றி 25 படி உயர்ந்த புழுங்கல் அரிசியும் கொடுத் துபகரித்தார்கள்.

---

## தமிழ்வேத பாராயணமும் சைவப் பிரசங்கமும்

சபாமண்டபத்தில் சனிவாரந்தோறும் தமிழ்வேத பாராயணம் நடைபெறுகின்றது. சனங்கள் வந்து இலவசமாகப் பாராயணம் செய்து பழகவேண்டி, 1922ஆு ஜூலை மீ முதல் அக்டோபர் மாதம் வரையில் தேவார உபாத்தியாயர் ஸ்ரீமான் தங்கவேல் பிள்ளையவர்களைக் கொண்டு வாரம் மும்முறை தேவாரம் கற்பிக்கப்பட்டது. சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் மகாதேவ முதலியாரவர்களால் (29-6-22) திருவாதவூரடிகள் புராணம் பிரசங்கிக்கப்பெற்றது.

---

## பத்திரிகைகள் வரவு

நவசக்தி; தமிழகம், குமரன், ஞானசூரியன், அகஸ்தியன், க்ஷத் திரிய மித்திரன், இந்துசாதனம், கற்பகம், மெய்கண்டான் என்னும் பத்திரிகைகளும், காரைச் சிவனடியார் திருக்கூட்டப் பிரசுரங்களாகிய துண்டு பத்திரிகைகளும் இலவசமாக வருகின்றன.

---

## புத்தக வரவு

அரக்கோணம் ஸ்ரீமான் டி. கோபாலச் செட்டியார், B. A. அவர் கள் தாம் வெளியிட்ட ஆதிதிராவிடர் பூர்வ சரித்திரம், முப்பொருளுறவு என்னும் இரண்டு நூல்களை யனுப்பினார்கள்.

திருச்சிராப்பள்ளி திரு. மா. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தாம் இயற்றிய "திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தின்

முதலாவது திருமலைச் சருக்கத்தில் சில ஆராய்ச்சி" என்னும் நூலை யனுப்பினார்கள்.

---

## கூட்டங்கள்

கடந்த 1922ஆம் நிர்வாக சபையார் 10 முறை கூடினார்கள். இரண்டு மகாஜனக் கூட்டங்கள் கூடின. முதலாவது மகாஜனக் கூட்டத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அப்போது மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் மடத்து அதிபர்மீது குற்றஞ்சாட்டிச் சிலர் கொண்டுவந்த வழக்கை நிராகரிக்குமாறு அதிகாரிகள் வேண்டிக் கொள்ளப்பட்டார்கள். இரண்டாவது மகாஜனக் கூட்டத்தில் ஸ்ரீமான் Sir M. C. T. முத்தையா செட்டியாரவர்கள் அவைத் தலைமைவகிக்க திருக்கூட்டத்தின் 23-வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப் பெற்றது.

---

## வரவு செலவு கணக்கு

1922ஆம் வரவு செலவு கணக்கு M. & S. M. Ry. Accountant ஸ்ரீமான் கூடலூர் சிவ வாசுதேவ முதலியாரவர்களாற் பரிசோதிக்கப் பெற்று, அவ்வப்போது நிருவாக சபையினரால் அங்கீகரிக்கப் பெற்று, இதினீற்றில் அச்சிடப்பெற்றுள்ளது.

---

## சாது அச்சுக்கூடம்

இவ்வச்சுக்கூடத்ததிபர் சைவ சமயாபிமான மேலீட்டினால் இத்திருக்கூட்டத்தினர் செய்தொழில்களனைத்தும் தமது சொந்த செய்தொழில்களாக மதித்து, வேண்டியவைகளையெல்லாம் வேண்டியவாறே சலிப்பின்றியும் தாமதமின்றியும் அச்சிட்டுத் தருவதோடு பற்பல சமயங்களில் பல பத்திரிகைகளை இலவசமாகவும் அச்சிட்டுபகரிக்கின்றார்கள்.

---

## கடன்

அரசாங்க உதவியை எதிர்பார்த்துப் பாடசாலையின் பொருட்டு அரசாங்கத்தார் மூலமாக நிலம் வாங்கினதினால் இதுவரையில் 1910 ரூபா கடன் நேரிட்டிருக்கிறது. முன் நிலத்துக்குச் சொந்தக்காரரா

யிருந்தவர் தமக்கு அரசினர் கொடுத்த தொகை போதாதென்று நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்திருப்பதனால் இதுவரையில் அரசாங்க உதவி கிடைக்காமல் தடைப்பட்டிருக்கின்றது. இதனால் மாதமாதம் சுமார் 20 ரூபாவரையில் வட்டி கொடுக்க நேரிடுகின்றது. ஸ்ரீமான் இருக்கம் ஆதிமூல முதலியாரவர்கள் தமது வீட்டைக் கொதுவைவைத்துக் கடன்வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

---

## பிரார்த்தனை

கிறிஸ்து சமயிகள் முதலாயினோர் எண்ணிறந்த உபாயங்களால் தங்கள் சமய ஒழுக்கங்களை இத்தேசமெங்கும் பரப்பி வருவதனாலும் சைவ சமய பரிபாலனம் செய்வாரின்மையாலும், உயர்வொற்ற சைவ சமய வொழுக்கங்கள் மிகவும் குன்றிக் கிடப்பனவாயின. ஆதலால் சைவ சமயிகள் ஒவ்வொருவரும் பராமுகமாயிராமல் இத்திருக்கூட்டத் திற்சேர்ந்து சைவசமயத்தைப் பாதுகாக்குமாறு நிர்வாகசபையார் பிரார்த்திக்கின்றார்கள்.

இத்திருக்கூட்டத்திற்கு உதவி புரிந்து சைவசமய பரிபாலனம் செய்பவரும் செய்விப்பவருமாகிய பெரியோர்களி யாவருக்கும் நிர்வாக சபையார் நன்றிபாராட்டி, வந்தனமளிக்கின்றார்கள். இவர்களியாவரும் ஸ்ரீ சிவகாம சுந்தர நடராஜப் பெருமானாரின் திருவருளால் சகலைசுவரிய சம்பன்னராய் நீடூழி வாழ்க.

இங்ஙனம்:

உத்திரவின்படி காரியதரிசிகள்,

சென்னை, 28--1—23.

இ. ஆதிமூல முதலியார்.

சி. இராஜரத்தின முதலியார்.

---

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

## 1922ஞு வரவு செலவுக் கணக்கு

### வரவு

| | ரூ. | அ. | ப. | ரூபா | அணா | பை |
|---|---|---|---|---|---|---|
| 1922ஞு ஜனவரிமீ 1உ இருப்பு | | | | 882 | 1 | 5 |
| முன்வருடத்தில் கடன்கொடுத்திருந்து திரும்பப் பெற்றுக்கொண்டது | | | | 1071 | 0 | 0 |
| திருக்கூட்டத்து மாதச் சந்தா | | | | 472 | 12 | 0 |
| சைவ பாடசாலை பிள்ளைகள் சம்பளம் | 244 | 8 | 6 | | | |
| நன்கொடை | 5 | 0 | 0 | | | |
| அரசாங்க உதவி | 583 | 0 | 0 | 832 | 8 | 6 |
| சைவப்பத்திரிகையின் வருடச் சந்தாவும் முன்வருடப் பத்திரிகைகளின் விற்பனை வரவும் | | | | 651 | 15 | 0 |
| திருமுல்லைவாயில் வசந்தோற்சவ வரவு, கிடைத்த சாமான்களின் மதிப்பு உட்பட | | | | 365 | 8 | 3 |
| பாடசாலைக்கு அரசாங்கத்தார் மூலமாக வாங்கின நிலத்தின்பொருட்டு நேரிட்ட கடன் (ஸ்ரீமான் இருக்கம் ஆதிமூல முதலியாருக்குக் கொடுக்க வேண்டி யிருப்பது) | | | | 1910 | | |
| வட்டி வரவு | | | | 26 | 15 | 3 |
| ஆகமொத்த வரவு ... | | | | 6212 | 12 | 5 |
| அடுத்த பக்கத்திற் காட்டியபடி மொத்த செலவு ... | | | | 6042 | 11 | 4 |
| 1922ஞு டிசம்பர்மீ 31உ இருப்பு | | | | 170 | 1 | 1 |

காரியதரிசிகள் :

இ. ஆதிமூல முதலியார்,

சி. இராஜரத்தின முதலியார்.

கணிதர் :

வா. தி. கோவிந்தராஜ முதலியார்.

கணிதபரிசோதகர் :

கூ. சிவ. வாசுதேவ முதலியார்.

## மகா சபையார்

### மாதந்தோறும் இரண்டு ரூபா சந்தா கொடுப்பவர்கள்

ஸ்ரீமான் ராவ்பஹதூர் யஸ். இரத்தினவேல் செட்டியார், புரசை.
,, ,, வி. மாசிலாமணி பிள்ளை B. A., B. L., புரசை.

### மாதந்தோறும் ஒரு ரூபா சந்தா கொடுப்பவர்கள்

,, ஆர். காசி விசுவநாத முதலியார், ஆனரெரி மாஜிஸ்ட்ரேட், வர்த்தகர்.
,, திரு - சபாபதி முதலியார், ரிடைர்ட் சப் இன்ஜினீர்.
,, சண்முகசுந்தர முதலியார், ப்ரிவெண்டிவ் ஆபீசர், கஸ்டம் ஆபீஸ்.
,, சி. தருமலிங்க முதலியார், கண்ட்ராக்டர், தங்கசாலை வீதி.
,, யம். டி. தியாகராஜ முதலியார், யம். டி. ராஜம் கம்பெனி, எலெக்ட்ரிக் சாமான் வர்த்தகர்.
,, சி. துரைசாமி முதலியார், ஜி. பி. ஓ. தையப்ப முதலி வீதி, 44.
,, கே. தெய்வசிகாமணி முதலியார், ரிஜிஸ்ட்ரார் பர்ஸனல் அசிஸ்டாண்டு.
ஸ்ரீமதி பெங்களூர் நாகரத்தினம்மாள், சங்கீத பண்டிதை.
ஸ்ரீமான் வி. பார்த்தசாரதி முதலியார், கன்ட்ராக்டர், 3-73, பிடாரியார் கோவில் வீதி.
,, யம். மாணிக்க முதலியார், வைத்தியர், கொண்டலையர் வீதி.
,, வி. முத்தையா பிள்ளை, வர்த்தகர், பெரியண்ண முதலி வீதி, 36.
,, பி. லோகநாத முதலியார், மானேஜர், ஐயாகண்ணு முதலியார் & சன்ஸ்.
,, ஓ. வேணுகோபால் முதலியார், ஹெட்கிளார்க், கட்லர் பாமர்.

### மாதந்தோறும் 8 அணு சந்தா கொடுப்பவர்கள்

,, டி. கெ. ஆறுமுக முதலியார், 9, கொண்டலையர் வீதி.
,, பி. ஆறுமுக முதலியார், 85, தையப்ப முதலி வீதி.
,, டி. ஆர். கிருஷ்ணசாமி முதலியார், ப்ரோகர் யஸ். ஐ. எக்ஸ்போர்ட்.
,, சி. குமாரசாமி நாயுடு சன்ஸ், காக்ஸ்டன் பிரெஸ்.
,, டி. சமரபுரி முதலியார், 24, கொண்டலையர் வீதி.
,, யன். சுப்பிரமணிய தேவர், 5, குப்பையர் வீதி.
,, கே. சோமசுந்தர முதலியார், 2-102, சாமி நாய்க்கன் வீதி.
,, யம். யஸ். தணிகாசலம் பிள்ளை, 107, தையப்ப முதலி வீதி.
,, பி. தியாகராஜ முதலியார், பெரியண்ண முதலி வீதி.
,, ஏ. துரைசாமி முதலியார், 11, மங்கம்மாள் வீதி.
,, சி. நாகரத்தின முதலியார் 103, சண்முகராயன் வீதி.
,, சி. கெ. பழனிவேல் முதலியார், பேபர் கரென்ஸி ஆபீஸ்.
,, டி. பாபு நாயுடு, 80, தையப்ப முதலி வீதி.

ஸ்ரீமான் டி. முத்துசாமி முதலியார், 56, ஆச்சாரப்பன் வீதி.
,, இ. முத்தையா முதலியார் B. A., காட்டுப்பிள்ளையார் கோவில் வீதி 2-32.
,, பி. முருகேச முதலியார், 12, பாளையப்பன் வீதி.
,, வி. முருகேச முதலியார், 30, குமரப்ப முதலி வீதி.
,, பு. முனிசாமி நாயுடு, 30, தையப்ப முதலி வீதி.
,, ராஜாராம் பிள்ளை, பிரசங்கபாநு, வீராசாமி பிள்ளை வீதி, 17.

## கால் வருடந்தோறும் ஒரு ரூபா சந்தா கொடுப்பவர்

,, யஸ். யஸ். சங்கர முதலியார் B. A., B. L., புரசை.

## மாதந்தோறும் 4 அணு சந்தா கொடுப்பவர்கள்

,, திருமணம் அண்ணாமலை முதலியார், ஆச்சாரப்பன் வீதி.
,, யம். அண்ணுலிங்க முதலியார், 1, கொண்டலையர் வீதி.
,, டி. அப்பாதுரை முதலியார், 302, தங்கசாலை வீதி.
,, அம்பலவாண முதலியார், கிராம்டன் கம்பெனி,
,, ஏ. ஆண்டி குருநாத முதலியார், 2, பாளையப்பன் வீதி.
,, பாடி ஆலாலசுந்தர முதலியார், 66, திருப்பளி வீதி.
,, பூ. ஆறுமுக முதலியார், 14, தியாகராயப்பிள்ளை வீதி.
,, கோ. ஆறுமுக மேஸ்திரி, கோடப்பமந்து, ஊட்டி.
,, யஸ். யஸ். ஆனந்தம், (ஆயுர்வேத) பண்டிட்.
,, யம். ஹிரால்லால் 29, குமரப்ப முதலி வீதி.
,, ஏ. யம். ஏகாம்பர முதலியார், ஆர். யம். யஸ். சூபரின்டெண்டெண்டு ஆபீஸ்.
,, கே. ஏகாம்பரச் செட்டியார், 123, சண்முகராயன் வீதி.
,, டி. கண்ணபிரான் பிள்ளை, 12, வீராசாமி பிள்ளை வீதி.
,, க. கணபதிசாமி முதலியார், 18, தியாகராஜப்பிள்ளை வீதி.
,, கோ. ச. கணேச மேஸ்திரி, கோடப்பமந்து, ஊட்டி.
,, சி. யஸ். கந்தசாமி தேசிகர், 40, முல்லா சாயப் வீதி.
,, டி. கந்தசாமி முதலியார், 24, வீராசாமி பிள்ளை வீதி.
,, தி. த. கனகசுந்தரம் பிள்ளை B. A., பென்ஷனர்.
,, சி. கன்னியப்ப முதலியார், கணேசம் ப்ரெஸ் அதிபர்.
,, சி. ஏ. கன்னியப்ப முதலியார், குட்டிசெட்டி வீதி 26, A.
,, ஆர். கன்னியப்ப முதலியார், வரதையர் வீதி, 7-9.
,, டி. யம். கிருஷ்ணசாமி முதலியார், ஆர். யம். யஸ். சூபரின்டெண்டெண்டு.
,, சி. கிருஷ்ணசாமி முதலியார், 12, பாளையப்பன் வீதி.
,, சி. யஸ். கிருஷ்ணசாமி முதலியார், 226, தங்கசாலை வீதி.
,, இ. கிருஷ்ணசாமி முதலியார், 39, வைத்தியநாத முதலி வீதி.
,, பி. கிருஷ்ணராவ், மண்ணடி போஸ்ட்மாஸ்டர்,

4

ஸ்ரீமான் சி. குப்புசாமி முதலியார், கிளார்க், ஜி. பி. ஓ.
,, தி. குப்புசாமி முதலியார், மெயில், சார்டர்.
,, கே. யஸ். குப்புசாமி செட்டியார், 22, பரமானந்தமுதலி வீதி.
,, சி. ஆர். குப்புசாமி முதலியார், 18, குப்பையர் வீதி.
,, கே. குப்புசாமி முதலியார், டெலிகிராபிஸ்ட்.
,, பி. குப்புசாமி முதலியார், கிளார்க், பெரம்பூர் ரெயில்.
,, கி. குப்புசாமி செட்டியார், 308, தங்கசாலை வீதி.
,, டி. யஸ். குமாரசாமி முதலியார், 222, தங்கசாலை வீதி.
,, டி. யம். குமாரசாமி பிள்ளை, 67, பிடாரியார் கோவில் வீதி.
,, பி. குழந்தைவேல் முதலியார், 22, பெரியண்ண முதலி வீதி.
,, சி. கேசவ முதலியார், கிளார்க், மண்ணடி போஸ்டாபீசு.
,, டி. வி. கோவிந்தராஜு, 109, தையப்ப முதலி வீதி.
,, சி. ஜகந்நாத முதலியார், 1, ஆயலூர் முத்தையா முதலி வீதி.
,, வல்லை. சண்முகசுந்தர முதலியார், செந்தமிழ் ரத்நாகரம்.
,, ஏ. வி. சண்முக சுந்தர முதலியார், 15, சண்முகராயன் வீதி.
,, யஸ். சண்முகம் பிள்ளை, வேப்பேரி போஸ்டாபீஸ்.
,, சி. வி. சண்முக முதலியார், கிராண்ட் & க்ரொட்ரிக்ஸ் ஆபீஸ்.
,, யம். சந்திரசேகர ஆச்சாரி, 53, ஏழுகிணற்று வீதி.
,, தி. சந்திரசேகர முதலியார், 6, பாஷியகாரலு நாயுடு வீதி.
,, சு. சபாபதி முதலியார், 44, பரமானந்த முதலி வீதி.
,, யம். ஆர். சம்பந்த நாயகர், 4, சின்ன நெய்யக்காரன் வீதி.
,, சி. சம்புலிங்கம் பிள்ளை, பி. யம். ஜி. ஆபீஸ்.
,, கா. சமரபுரி முதலியார், 76, நைனியப்பன் வீதி.
,, தா. சிங்கார ஆச்சாரி, ஏழுகிணற்று வீதி.
,, த. சிவசங்கர முதலியார், 10, வீராசாமி பிள்ளை வீதி.
,, ஏ. சிவசங்கர முதலியார், 30, வைத்தியநாத முதலி வீதி.
,, யஸ். சிவசங்கர முதலியார், உபாத்தியாயர்.
,, யன். டி. சிவசுப்பிரமணிய முதலியார், 40, முல்லா வீதி.
,, சி. சிவஞானம் பிள்ளை, 31, அப்பு முதலி வீதி, மயிலை.
,, ஏ. யன். சிவப்பிரகாச முதலியார், கேபில் டெலிகிராப் ஆபீசு.
,, பி. சிவானந்த முதலியார், இன்ஸ்பெக்டர், ஆர். யம். யஸ்.
,, திரு. சின்னசாமி ஐயர், 10, வீராசாமி பிள்ளை வீதி.
,, சி. ஆர். சீனிவாச முதலியார், 109, தையப்ப முதலி வீதி.
,, வி. சுடலைமுத்துப் பிள்ளை, 41, வீராசாமி பிள்ளை வீதி.
,, சி. சுந்தரபாபு நாயுடு, 73, பிடாரியார் கோயில் வீதி.
,, டி. சி. சுந்தரம் பிள்ளை, ஸெண்ட்ரல் ஸர்வே ஆபீஸ்.
,, யம். சுந்தர மூர்த்தி முதலியார், 26, மங்கம்மாள் வீதி.
,, ஆர். வி. சுப்பராயலு செட்டியார், உபாத்தியாயர்.
,, கே. சுப்பிரமணிய செட்டியார், 123, சண்முகராயன் வீதி.

ஸ்ரீமான் தி. சுப்பிரமணியம் பிள்ளை, 46, வீராசாமி பிள்ளை வீதி.
,, P. W. சுப்பிரமணிய முதலியார், 11, சண்முகராயன் வீதி.
,, யம். சொக்கலிங்க முதலியார், 26, சாம்பையர் வீதி.
,, வி. ஆர். சோமசுந்தர முதலியார், 105, கோவிந்தப்பநாய்க்கன் வீதி.
,, வி. தங்கவேல் முதலியார், 7, ஆயலூர் முத்தையா முதலி வீதி.
,, கே. தங்கவேலு முதலியார், 83, பிடாரியார் கோயில் வீதி.
,, பாடி. தங்கவேலு செட்டியார், வர்த்தகர், பெரியண்ண முதலி வீதி.
,, இ. யன். தணிகாசல முதலியார், B.A., B.L., வண்ணாரப்பேட்டை.
,, சி. தட்சிணாமூர்த்தி பிள்ளை, 1/32, நாட்டுப் பிள்ளையார்கோவில் வீதி.
,, ஏ. தருமலிங்க முதலியார், 49, ஏழுகிணற்று வீதி.
,, திருவூர். தியாகராஜ முதலியார், 15, சீனு முதலி வீதி.
,, டி. திருநாவுக்கரசு முதலியார், 4, குமரப்ப முதலி வீதி.
,, டி. துரைக்கண்ணுப் பிள்ளை, 21, மங்கம்மாள் வீதி.
,, Y. துரைசாமி பிள்ளை, 41, சண்முகராயன் வீதி.
,, சி. துரைசாமி முதலியார், வர்ண வியாபாரம், ஐயாபிள்ளை வீதி.
,, பி. துரைசாமி முதலியார், 20, பாளையப்பன் வீதி.
,, யம். துரைசாமி முதலியார், காக்ஸ்டன் ப்ரெஸ்.
,, டி. ஆர். துரைசாமி முதலியார், 2, பாளையப்பன் வீதி.
,, பு. துரைசாமி செட்டியார், பெரியண்ண முதலி வீதி, 50.
,, டி. துரைசாமி முதலியார், ஸ்டிவர்ட், ஜெனரல் ஆஸ்பிடல்.
,, யஸ். ஆர். தேவராஜுலு நாயுடு, 240, தங்கசாலை வீதி.
,, பி. தொளசிங்க ராவ், 2, ஏலா கந்தப்பன் வீதி.
,, சி. யஸ். தோதாத்திரி முதலியார், தங்கசாலை வீதி, 304.
,, சி. நடராஜ முதலியார், 70, ஏழுகிணற்று வீதி.
,, டி. வி. நடராஜ முதலியார், 192, தங்கசாலை வீதி.
,, பு. நடராஜன், 24, ஐயா முதலி வீதி.
,, பி. நடேச முதலியார், கிளார்க். பெஸ்டு & கம்பெனி.
,, ஏ. நடேச முதலியார், 39, ஏழுகிணற்று வீதி.
,, ஏ. நடேச முதலியார் 77, தையப்ப முதலி வீதி.
,, சி. நரசிங்கராவ் நாயுடு, (Cantractor.)
,, T. நல்லசிவன் பிள்ளை, B. A., B. L., மைலாப்பூர்.
,, ஜி. நாராயணசாமி நாயுடு, 12, வீராசாமி பிள்ளை வீதி.
,, நாராயணசாமி பிள்ளை, ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்.
,, சி. நாராயணசாமி முதலியார், B. A., B. L., 318, தங்கசாலை வீதி.
,, டி. நாராயணசாமி முதலியார், 112, சண்முகராயன் வீதி.
,, வே. நேத்திர சிகாமணி முதலியார், ப்ராட்வே போஸ்ட்மாஸ்டர்.
,, பச்சையப்பப்பிள்ளை, கிளார்க், பின்னி கம்பெனி.
,, பத்மநாப முதலியார், கிளார்க் மண்ணடி போஸ்டாபீஸ்.
,, ஏ. பரமசிவ முதலியார், 14, சண்முகராயன் வீதி.

ஸ்ரீமான் செ. பார்த்தசாரதி ஆச்சாரி, 27, தியாகராஜப்பிள்ளை வீதி.
" பார்த்தசாரதி முதலியார், வெற்றிலை வர்த்தகம்.
" வி. பார்த்தசாரதி முதலியார், தம்பு செட்டி வீதி, வர்த்தகர்.
" ஆர். பெருமாள்சாமி நாயுடு, வர்த்தகர் வீராசாமி பிள்ளை வீதி.
" பி. பொன்னரங்க முதலியார், சீப் சூபர்வைசர், டிராம்வே.
" சி. பி. பொன்னுசாமி முதலியார், மெயில் ஏஜெண்டு ஆர். யம். யஸ்.
" யம். வி. மணவாளம் பிள்ளை, கட்லர் பாமர் கம்பெனி.
" அ. சு. மாணிக்கம் பிள்ளை, வெங்காய வர்த்தகம்.
" யஸ். மாணிக்க முதலியார், 192, சைனுபஜார் ரோட்.
" வி. மாணிக்க முதலியார், 32, தையப்ப முதலி வீதி.
" மாணிக்கவாசக முதலியார், 12, திருப்பளி வீதி.
" கே. மாதவச்செட்டியார், கிளார்க், பின்னி கம்பெனி.
" மாதவராசு, 37, வீராசாமி பிள்ளை வீதி.
" டி. பி மீனுட்சி சுந்தர முதலியார், கிளார்க், பின்னி கம்பெனி.
" சி. டி. முத்துக்கிருஷ்ண முதலியார், 26, கொண்டலையர் வீதி.
" டி. முத்துசாமி முதலியார், வைத்யநாத முதலி வீதி 6.
" ஆரணி முருகேச முதலியார், ராயபுரம் ரெயில்வே ஷெட்
" மயிலை முருகேச முதலியார், வேங்கடேச நாயக்கன் வீதி.
" பாரிவாக்கம் முனிசாமி முதலியார், 26, வடமலை மேஸ்திரி வீதி.
" ஏ. முனிசாமி முதலியார், மதராஸ் கிளப்.
" யம். ஏ. ரங்கசாமிப்பிள்ளை, வீராசாமி பிள்ளை வீதி.
" கூ. த. ரங்கசாமி முதலியார், 9, பாளையப்பன் வீதி.
" பி. ரங்கநாத முதலியார், 23 கொண்டலையர் வீதி.
" டி. ரங்கநாயகுலு, 43, தையப்ப முதலி வீதி.
" யம். இரத்தின சபாபதி முதலியார், பேபர் கரென்சி.
" சி. ரத்தின முதலியார், யம். & யஸ். யம். ரெயில் ஏஜெண்டு.
" கே. ராஜகோபால செட்டியார், 123, சண்முகராயன் வீதி,
" வி. ராஜகோபால முதலியார், 7-8, வெங்கையர் வீதி.
" சி. ராஜகோபால செட்டியார், 72, தம்புசெட்டி வீதி.
" ஏ. ராஜமன்னுர் பிள்ளை, பாளையப்பன் வீதி.
" சி. ராஜரத்தின முதலியார், 17, கிருஷணப்ப மேஸ்திரி வீதி.
" அ. ராஜரத்தின முதலியார், எண்ணெய் வியாபாரம், புலிபோன் கடை.
" யம். ராஜா முதலியார் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்.
" பி. வி. ராமசாமி முதலியார், 294, தங்கசாலை வீதி.
" யம். ராமலிங்க முதலியார், 10, கொண்டலையர் வீதி.
" கே. லிங்கசாமி செட்டியார், 108, சண்முகராயன் வீதி.
" தி. லோகநாத முதலியார், முத்துகிருஷ்ணன் வீதி.
" கே. டி. வடிவேலு பிள்ளை, சென்ட்ரல், சர்வே ஆபீஸ்.

ஸ்ரீமான் கே. வடிவேலு பிள்ளை, 28, வரதையர் வீதி.
,, பி. வடிவேலு முதலியார், 6, கொண்டலையர் வீதி.
,, சி. வடிவேலு முதலியார், 23, பைராகிமடத்து கோயில் வீதி.
,, வி. வரதராஜலு நாயுடு, ஸ்டாம்பு வெண்டர், G. P. O.
,, டி. விநாயக முதலியார், ஆர். யம். யஸ். சூபரின்டெண்டு ஆபீஸ்.
,, பி. வீராசாமி நாயுடு, 11, கருப்பண்ணன் வீதி.
,, ஒ. வெங்கடவாமுனி ஐய, உபாத்தியாயர்.
,, டி. யம். வேணுகோபால முதலியார், B. A., B. L., 90, பிடாரியார் கோயில் வீதி.
,, கே. வேதகிரிச் செட்டியார், கிளார்க் பின்னி கம்பெனி.
,, யம். வேதாசல முதலியார், 20, கொண்டலையர் வீதி.
,, ப. வேலு முதலியார், 10, அருணசல முதலி வீதி.
,, கூ வைத்திய லிங்கச்செட்டியார், ஜவுளி 94, கிடங்கு வீதி.

அரை வருடத்திற்கு ஒரு ரூபா கொடுப்பவர்

,, யஸ். விநாயக முதலியார், B. A., சூபரின்டெண்டெண்டு அக்கவுண்டாண்டு ஜெனரல் ஆபீஸ்.

---

## ஆன்மா

நித்தியமாய், வியாபகமாய்ச், சேதனமாய்ப், பாசத்தடையுடையோராய்ச், சார்ந்ததன் வண்ணமாய்ச், சரீரந்தோறும் வெவ்வேருய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அநுபவிப்போராய்ச், சிற்றறிவுஞ் சிறுதொழிலும் உடையோராய்த் தமக்கு ஒரு தலைவனை உடையவராய் இருப்பவரே ஆன்மாக்களாவார்கள்.

அவ்வான்மாக்கள் தூலசரீரம், சூக்குமசரீரம் என இரண்டுவகைச் சரீரம் எடுப்பார்கள்.

அவற்றுள் தூலசரீரமாவது சாதி, குலம், பிறப்பு முதலியவைகளால் அபிமானஞ் செய்தற்கு இடமாய்ப், பிருதிவி, அப்புத், தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பூதமுங்கூடிப் பரிணமித்த உருவுடம்பாம். சூக்குமசரீரமாவது சத்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என்னுங் காரண தன் மாத்திரையைந்தும் மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரண மூன்றுமாகிய எட்டினாலும் ஆக்கப்பட்டு, ஆன்மாக்கள் தோறும் வெவ்வேருய், அவ்வவ்வான்மாக்கள் போகம் அநுபவித்தற்குக் கருவியாய், ஆயுள் முடிவின் முன்னுடம்புவிட்டு மற்றோருடம்பு எடுத்தற்கு ஏதுவாய் இருக்கும் அருவுடம்பாம்.

ஆன்மாக்கள், நல்வினை தீவினை என்னும் இருவினைக்கு ஈடாக, நால்வகைத் தோற்றத்தையும், எழுவகைப் பிறப்பையும், எண்பத்து நான்கு நூறாயிர யோனிபேதத்தையும், உடையவைகளாய்ப் பிறந்திறந்து உழலும்.

நால்வகைத் தோற்றங்களாவன :—

அண்டசம், சுவேதசம் உற்பிச்சம், சராயுசம் என்பவைகளாம். அண்டசம் முட்டையிற்றோன்றுவன. சுவேதசம் வேர்வையிற்றோன்றுவன. உற்பிச்சம் வித்து, வேர், கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசங் கருப்பையிற் றோன்றுவன.

எழுவகைப் பிறப்புகளாவன :—

தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பவைகளாம். இவ்வெழுவகையினுள்ளும், முன் நின்ற ஆறும் இயங்கியற்பொருள்கள்; இறுதியில் நின்ற தாவரங்கள் நிலையியற் பொருள்கள். இயங்கியற்பொருளின் பெயர் சங்கமம், சரம். நிலையியற் பொருளின் பெயர் தாவரம், அசரம்.

கருப்பையிலே பிறப்பன :—

தேவர்களும், மனிதர்களும், நாற்கால் விளங்குகளுமாம்.

முட்டையிலே பிறப்பன :—

பறவைகளும், ஊர்வனவும், நீர்வாழ்வனவுமாம்.

வேர்வையிலே பிறப்பன :—

கிருமி, கீடம், பேன் முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவைகளுமாம்.

வித்தினும் வேர், கோம்பு, கோடி, கிழங்குகளிலும் பிறப்பன :—

தாவரங்கள்.

எண்பத்துநான்கு நூறாயிரயோனி பேதங்களின் விவரம்.

| | | | |
|---|---|---|---|
| (க) | தேவர்.................. | கக,00,000 | யோனிபேதம் |
| (உ) | மனிதர்............... | கூ,00,000 | ,, |
| (ங) | நாற்கால் விலங்கு...... | க0,00,000 | ,, |
| (ச) | பறவை................ | க0,00,000 | ,, |
| (ரு) | ஊர்வன்................ | கரு,00,000 | ,, |
| (சு) | நீர்வாழ்வன......... | க0,00,000 | ,, |
| (எ) | தாவரம்.............. | ககூ,00,000 | ,, |
| | | அ௲ அச,00,000 | ,, |

ஆன்மாக்கள் இருவினைகளைச் செய்தற்கும் இருவினைப்பயன்களை அநுபவித்தற்கும் இடம் பூமி; நல்வினைப் பயன்களை அநுபவித்தற்கு இடம் சுவர்க்க முதலிய மேலுலகங்கள்; தீவினைப்பயனை அநுபவித்தற்கு இடம் இருபத்தெட்டுக்கோடி நரகங்கள்.

நல்வினை செய்த ஆன்மாக்கள் தூலசரீரத்தை விட்டவுடனே சூக்கும சரீரத்தோடு பூத சாரசரீரமாகிய தேவ சரீரத்தை எடுத்துக்கொண்டு சுவர்க்கத்திலே போய் அந்நல்வினைப் பயனாகிய இன்பத்தை அநுபவிக்கும். தீவினை செய்த ஆன்மாக்கள் தூலசரீரத்தை விட்டவுடனே சூக்கும சரீரத்தோடு பூத சரீரமாகிய யாதனா சரீரத்தை எடுத்துக்கொண்டு நரகத்திலேபோய் அத்தீவினைப் பயனாகிய துன்பத்தை அநுபவிக்கும். இப்படியன்றி ஒரு தூலசரீரத்தை விட்டவுடனே பூமியிலே தானே ஒரு யோனிவாய்ப்பட்டு மற்றொரு தூலசரீரத்தை எடுப்பதும் உண்டு.

சுவர்க்கத்திலே இன்பம் அநுபவித்த ஆன்மாக்கள் தொலையாது எஞ்சிநின்ற கன்ம சேடத்தினாலே திரும்பப் பூமியில்வந்து மனிதர்களாய்ப் பிறக்கும்.

நரகத்திலே துன்பம் அநுபவித்த ஆன்மாக்கள் தொலையாது எஞ்சி நின்ற கன்மசேடத்தினாலே திரும்பப் பூமியில் வந்து முன்பு தாவரங்களாயும், பின்பு நீர்வாழ்வனவாயும், பின்பு ஊர்வனவாயும், பின்பு பறவைகளாயும், பின்பு விலங்குகளாயும் பிறந்து பின்பு முன் செய்த நல்வினை வந்து பொருந்த மனிதர்களாய்ப் பிறக்கும்.

பசுபதியாகிய சிவபெருமானை அறிந்து வழிபட்டு முத்தியின்பம் பெற்றுய்தற்குக் கருவியாதலால் மேற்குறித்த எழுவகைப் பிறப்பினுள்ளும் மனிதப் பிறப்பே மிக அருமையுடையதாம்.

மனிதப் பிறப்பை எடுத்த ஆன்மாக்கள் தங்கள் தங்கள் பக்குவத்துக்கு ஏற்பப் படிமுறையினாலே பிறவிதோறும் பௌத்தம் முதலிய புறச்சமயங்களில் ஏறி ஏறி அவ்வச்சமயத்துக்குரிய நூல்களில் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்வார்கள்; பின்பு அப்புண்ணிய மேலீட்டினாலே வைதிக நெறியை அடைந்து வேதத்தில் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்வார்கள்; பின்பு அப்புண்ணிய மேலீட்டினாலே சைவசமயத்தை அடைவார்கள். சைவசமயத்தை அடைந்து சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சரியை, கிரியை, யோகங்களை விதிப்படி மெய்யன்போடு அநுட்டித்தவருக்குச் சிவபெருமான் ஞானசாரியாரை அதிட்டித்துவந்து, சிவஞானம் வாயிலாக உண்மை முத்தியைக் கொடுத்தருளுவர்.

புறச்சமயிகளுக்கு அவ்வவரால் உத்தேசித்து வழிபடப்படுந் தெய்வத்தைச் சிவபெருமானே தமது சத்தியினால் அதிட்டித்து நின்று அவ்வவ்வழிபாடு கண்டு பலன் கொடுப்பார்.

சரியையாவது சிவாலயத்துக்குஞ் சிவனடியார்களுக்குந் தொண்டு செய்தலாம்.

கிரியையாவது சிவலிங்கப் பெருமானை அகத்தும் புறத்தும் பூசித்தலாம்.

யோகமாவது விடயங்களின் வழியே போகாவண்ணம் மனத்தை நிறுத்திச் சிவத்தைத் தியானித்துப் பின்பு தியானிப்போனாகிய தானுந் தியானமுந் தோன்றாது தியானப் பொருளாகிய சிவம் ஒன்றே விளங்கப் பெறுதலாம்.

ஞானமாவது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் இலக்கணங்களை அறிவிக்கும் ஞானநூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடலாம்.

சரியையினால் அடையும் பலன் சிவசாலோக்கியமும், கிரியையினால் அடையும் பலன் சிவசாமீப்பியமும், யோகத்தினாலடையும் பலன் சிவசாரூப்பியமுமாம்; இம்மூன்றும் பதமுத்தி. ஞானத்தினால் அடையும் பலன் சிவசாயுச்சியமாகிய பரமுத்தியாம்.

சைவசமயிகளே!

இங்ஙனங் கூறிய அனைத்தும் வேதசிவாகம சாரமாகையாலும், அத்தியாவசியகமாய்ச் சைவசமயிகள் யாவரும் அறிந்திருக்க வேண்டுவதாகையாலும் இதைப் பலதரம் வாசித்துப் பொருள் விளங்காதவற்றைக் கேட்டுணர்ந்து பரமபதியாகிய சிவபெருமானுடைய அநுக்கிரகத்தைப் பெற்று உய்யுங்கள்! உய்யுங்கள்!!

திருச்சிற்றம்பலம்.

சைவப்பிரகாச ஸமாஜீயர்கள்,

திருமந்திரநகரம், விய௵ கார்த்திகை௴.